பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை 02 | 25 நவம்பர் 2017 | விதி : 76



துயிலும் இல்லங்களை கொச்சைப்படுத்தாதீர்...!



தாயகக் கனவுக்காக வீழ்ந்த முதல் வித்துக்கள்...




துரித உணவுகள்: உணவுப் புரட்சியின் மாயவலை



என்ன கைமாறு செய்வோம்?

# தேசத் தலைவன் 63



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# தாயகக் கனவுக்காக வீ



## லெப். சங்கர்
(முதல் மாவீரர்)

லெப். சங்கர் அல்லது சுரேஷ் என அழைக்கப்பட்ட செல்வச்சந்திரன் சத்தியநாதன். வடமராட்சி கம்பர்மலையை சேர்ந்தவர்.

1961.06.19 ஆம் நாள் பிறந்தவர். தனது 16 ஆவது வயதில் - 1977 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இணைய விரும்பி செல்கிறார். போராட்ட வாழ்வின் கடின தன்மையை கருத்தில் கொண்டு சிறியவரான சங்கரை, தலைவர் பிரபாகரன் ஏற்க மறுத்து கல்வியைத் தொடருமாறு அனுப்பிவிடுகிறார்.

போராளி கனவை சுமந்த சங்கர் மீண்டும் அடுத்த ஆண்டு -1978 இல் திரும்ப செல்கிறார். விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களில் ஒருவரானார். 1979 இல் பயிற்சியை பெறுகிறார்.அதே ஆண்டு தேடப்படுவோரில் ஒருவராகிறார்.

1981 இல் நவீன ஆயுதத்தைப் பெறுகிறார். அத்துடன் தாக்குதல் குழு ஒன்றுக்கும் பொறுப்பாளராகிறார். 1982 ஆடி இரண்டாம் நாள் முதல் தாக்குதலை நெல்லியடியில் தலைமையேற்று நடத்தினார். இதில் 4 பொலிஸார் கொல்லப்பட்டு, ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இதே ஆண்டு தலைவர் பிரபாகரனிற்கு முதன்முறையாக மெய்ப்பாதுகாவலராக இருவர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சங்கரே.

இராணுவ முற்றுகைக்குள் இருந்து சங்கர் தப்பியபோது சூட்டுக்கு இலக்காகி வயிற்றில் காயமடைகிறார். தமிழ்நாட்டுக்கு மருத்துவத்திற் காக கொண்டு செல்லப்பட்டபோதும் பலனின்றி 1982. 11. 27 அன்று தாயகத்தின் முதல் வித்தாக தலைவனின் மடியிலேயே உயிர் சாய்ந்தார்.



## லெப். சீலன்
(முதல் தளபதி)

லெப். சீலன் அல்லது ஆசிர் என்று அறியப்பட்டு தலைவர் பிரபாகரனால் இதயச்சந்திரன் என்றும் விளிக்கப்பட்டவர் ஞானப்பிரகாசம் லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி.

தமிழர் தலைநகர் திருகோணமலையே இவரின் பிறந்த இடம். 1960. 12. 11 அன்று பிறந்தார். 1978 இல் பாடசாலை நிகழ்வில் ஏற்றப்பட இருந்த சிங்கக்கொடியை (தேசியக் கொடி) பொஸ்பரஸை பயன்படுத்தி ஏற்றியபோதே எரிய வைத்தார்.

கைது செய்யப்பட்ட சாள்ஸ் அன்ரனி, இராணுவ, பொலிஸ் எந்திரங்களால் சித்திரவதைக்கு உள்ளானான். மீண்டு வந்து விடுதலைப் புலியானான். ஆரம்பம் முதலே பயிற்சி, சண்டையில் சிறந்து விளங்கியதால் புலிகளின் சண்டை அணிக்கு இவரே தளபதி - புலிகளின் முதல் தளபதி.

1981இல் புலிகளின் முதல் தாக்குதலில் 2 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இருவரையும் வீழ்த்தியவர் சாள்ஸ் அன்ரனியே. 1982 இல் காரைநகர் தாக்குதல், பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் பங்கேற்றார்.

*சாள்ஸ் அன்ரனி மறைந்திருந்த இடம் காட்டிக் கொடுக்கப்பட்டது.* இராணுவம் முற்றுகையிட்டது. முற்றுகையை உடைத்து நண்பர்களுடன் வெளியேறியபோது சீலன் காயமடைகிறார். தன்னிடம் இருந்த ஆயுதத்தை காப்பாற்றவும், எதிரிகளிடம் பிடிபடாமலும் இருக்க தன்னை சுட்டுக் கொல்லுமாறு பணிக்கிறார். தளபதியின் கட்டளை துயரத்துடன் நிறைவேற்றப்படுகின்றது. 1983. 07 .15 ஆம் நாள் முதல் தளபதி தாய் மண் மீட்புக்கு தன்னை உரமாக்கினான்.



## கப்டன் ஜே
(முதல் இஸ்லா

கப்டன் ஜோன்சன் என அழைக்க
போராட்டத்திற்காக புலியாக தன்னை
தமிழர். மட்டக்களப்பு ஓட்டமாவடியில் 2
ஜீனை தீன். 'தமிழீழ விடுதலை நாகங்
நடத்தினார். கிழக்கு மாகாணத்தில் த
அதிர்வலைகளை ஏற்படுத்தினார்.

பொலிஸ், இராணுவ நடவடிக்கைக
இழக்கவே. தமிழீழ விடுதலைப் புலிக
யும் இணைத்துக் கொண்டார். இந்தி
பயிற்சி முகாமில் ஆயுதப் பயிற்சியை
என்பதில் பெருமை கொண்ட ஜீனை
வாசத்துடன் ஏற்றுக் கொண்டார்.

1985இல் குருநகர் பொலிஸ் நிலை
முகாம் தாக்குதல்களில் ஈடுபட்டு தனது
வெளிப்படுத்தியிருந்தார். பின் மட்டக்க

நண்பருடன் மோட்டார் சைக்கிளில்
பொலிஸார் மறைந்திருந்து தாக்கி ஜே
பனாகொட சிறையில் அடைத்தனர். அ
1985.11.30 அன்று இராணுவத்தின் து
மண்ணுக்கு முதல் இஸ்லாமிய தமிழ



## 2 ஆம் லெப். மாலதி
(முதல் பெண் மாவீரர்)

மாலதி என அறியப்பட்ட பேதுரு சகாயசீலி மன்னார் ஆட்காட்டி வெளியை சேர்ந்தவர். 1967.01.04 ஆம் நாள் பிறந்தவர் 1984 இல் தன்னை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டார்.

பயிற்சிகள் முடித்து புலி வீராங்கனையானவர் இந்திய இராணுவத்துக்கு எதிராகப் பல சண்டைகளில் பங்கெடுத்தார். இந்திய இராணுவத்துக்கு எதிராக 1987 ஒக்ரோபரில் கோப்பாயில் பெரும் தாக்குதலைப் புலிகள் தொடங்கினர். அதில் பங்கெடுத்தார். இந்தத் தாக்குதலில் மாலதி, 2 ஆம் லெப். மாலதியாக 1987.10.10 அன்று வீரச்சாவடைந்தார். இவரே தமிழின விடுதலைக்காகப் பலியான முதல் பெண் மாவீரர்.







## மேஜர் காந்தரூபன் | கப்டன் கொலின்ஸ் | கப்டன் வினோத்
(முதல் கடற்கரும்புலிகள்)

மேஜர் காந்தரூபன் என அழைக்கப்பட்டவர் யோகராசா கோணேஸ்வரன் (வல்வெட்டித்துறை) என்ற இயற்பெயருக்கு உரியவர். இதேபோன்று கப்டன் கொலின்ஸின் இயற்பெயர் பர்ணாந்து சில்வஸ்டார் (மன்னார்), கப்டன் வினோத் வேலுப்பிள்ளை திலகராசா (வல்வெட்டித்துறை).

வெவ்வேறு காலப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தவர்கள். கடற்புலிகள் அமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் உள்வாங்கப்பட்டார்கள். கடற்படையின் கப்பல்கள் படகுகள் மீனவர்களுக்கும், தாயகத்துக்கும் பெரும் தொந்தரவளிக்க, தரையில் நடத்தப்படுவது போன்று, கடலிலும் கரும்புலித் தாக்குதல்களை நடத்தத் திட்டமிடப்பட்டது.

கேணல் சங்கர் தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்டு திட்டமும் தீட்டப்பட்டது. வல்வெட்டித்துறையில் அழிப்புக்கு கட்டளையிட்டுக் கொண்டிருந்த எடித்தாரா கப்பலை 10.07.1990 ஆம் ஆண்டு தாக்கியழித்து முதல் கரும்புலி மறவர்களாகினர்.



## கப்டன் அ
(முதல்

அங்கையற்க
சிங்கம் புஸபக
1973.05.10 ஆம்
யில் ஈழயபோத
புகுந்தார்.

கடற்புலிகள்
பெற்று பல கடற்
அனுமதிக்கக்கே
கடற்கரும்புலிக
35 கிலோமீற்றர் த

காங்கேசன்து
கப்பல், போறாப்
யானார். 16.08.19
அங்கையற்கண்



# எங்கள் கல்லறைகளை மிதிக்காதீர்கள் இதயம் வலிக்கிறது...!

நோக்கன்



மாவீரர் 1

நான் ஒரு மாவீரன் என்ற பெருமை யில் பேசுகிறேன். சொல்லால் வடிக்காது செயலால் வடித்து மடிந்தவன். நான் செய்த வரைக்கும் நல்ல காரியம் என்ற திருப்தியுடன் இயற்கையோடு சங்கமித்தவன் என்ற பெருமை எனக்கு உண்டு. அவர் காட்டிய பாதை மிகவும் புனிதமானது. பக்கச் சார்பற்றது. நேர்மையானது. இலக்கைவிட அவர் எமக்கு வேறொன்றையும் கற்றுத்தரவில்லை. இலக்கை நோக்கிப் பயணிப்பதே எங்கள் இலட்சியமாக இருந்தது. எதிரியின் துப்பாக்கிச் சன்னமானது என்னை நோக்கி வருவதைக் கண்டபின்பும் நான் புறமுதுகிடாதவாறு சமர் புரிந்தேன். இறுதிவரை போராடினேன் என்ற பெருமை கூட என் கைவசம் உண்டு. என்னை நம்பியவரையோ, என்னை நம்பிய மக்களையோ நான் இறுதிவரை ஏமாற்ற வில்லை என்ற திருப்தியே எனக்கு கிடைத்த நற்சான்றிதழ்.

அதற்காக நாம் மண்ணோடு சங்கமிக்க முன்னரும் பற்பல தியாகங்களைச் செய்திருந்தோம். உறக்க மற்ற இரவுகள். ஊன் அற்ற பொழுதுகள். நீண்ட நடைப் பயணம். நீட்சி பெற்ற களப்பணிகள். இவையெல்லாம் எனக்குச் சந்தோசத்தையே தந்திருக்கின்றன.எதிரியின் குண்டு எனது இதயத்தைச் சல்லடை போட்டபோது கூட அது எனக்கு வலியாகத் தெரியவில்லை. ஆனால் இப்போ சில காலமாக இதயம் வலிக்கிறது. 'நிலைகெட்ட தமிழரை நினைக்கையிலே நெஞ்சு நோகிறது'. எமது பெயரைச் சொல்லி அரசியல் செய்கின்ற அரசியல் வியாபாரியாக மாறிவிட்ட எமது சமூகத்தின் போலிக் காவலர்கள் பற்றி எண்ணியே எனது மனம் நோகிறது.

'தாங்களே தமிழர் தலைவர்கள்' என்று வாய் கூசாமல் பொய் சொல்லி மக்களை ஏமாற்றுகின்ற கயவர்களை எண்ணி மனம் கூசுகிறது. நாளும் பொழுதும் நற் தமிழின் பெயரைச் சொல்லியே சொகுசு வாழ்க்கை, சுற்றுப் பயணம். சுற்றியபணத்தைக் கொண்டு நன்கொடை. முதலைக் கண்ணீர். இந்தக்கேவலமானவர்கள் சமூகத்தின் வேர்களாக நடிக்கும்வரை தமிழ்சமூகத்திற்கு விடிவில்லை. ஆயிரமாயிரம் வருடங்களுக்கு முன்பு ஒரு விதை இடப்பட்டதே இன்றைய விருட்சத்திற்குக் காரணம். எனவே நாம் விதையாகியிருக்கிறோம், விருட்சமாவதற்கு என்ற உண்மை ஒரு நாள் இவர்களுக்குப் புரியும். அப்போ மக்களும் தெளிவோடிருப்பர். அதுவரை எமது கல்லறையில் இவர்கள் காலடிகள் படாது இருக்கட்டும். அதுவே இந்த அரசியலவாதிகள் எமக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

மாவீரர் 2

நான் எதிரியால் அழிக்கப்பட்டவன் அல்ல. இருந்தும் எமது இனத்தைப் பாதுகாக்க வேண்டி என் உயிரை ஈய்ந்தவன். நான் மடிந்தது எதிரியின் சன்னத்தினால் அல்ல. என்னைக் காக்க வந்த இந்திய நண்பன் எதிரியாய் மாறியதால் நடந்த கொடுமை. பின்புதான் எனக்குப் புரிந்தது, அவன் போலி நண்பன் என்று. அவர்கள் வந்த நோக்கம் நேர்மையற்றது என்று. ஏதோ ஒன்றைச் சூறையாட வந்தவர்கள் என்றதை நாம் புரிந்து கொள்ளச் சில காலம் எடுத்தாலும் காலப் போக்கில் அவனது கயமைத் தனத்தை புரிந்து கொண்டோம்.

முன்பே திட்டமிட்டபடி மிகவும் மூர்க்கமாக அவனது நாடகத்தை அரங்கேற்றினான். அவன் மனதில் அத்தனை கடூரம். எத்தனை வன்புணர்வுகள்? எத்தனை கொலைகள்? மிகக் கொடிய மிருகத்தனமான மனிதர்களை அப்போதுதான் எம் மக்கள் அடையாளங் கண்டனர். அமைதிப் படையாக அவனை இங்கு அனுப்பி வைத்தவர்கள் மனிதர்கள் அல்ல. அவர்களும் மிருகங்களே!

அவனோடு போராட ஒரு போதும் நான் விரும்பவில்லை. அவனை நோக்கி எனது துப்பாக்கியை நீட்ட நான் ஒரு போதும் நினைத்ததில்லை. எப்போது அவ்ன் எனது சமூகத்தின் ஆணிவேரை அசைக்க எத்தனித்தானோ! அப்போது தான் எனது துப்பாக்கியைச் சன்னங்களினால் நிரப்பிக் கொண்டேன். ஒரு தாய் அவளது மக்கள் முன்பு நிர்வாணமாக்கப் பட்டுச் சின்னாபின்னப் படுத்திக் குதறி எறியப்பட்ட காட்சியைப் பார்த்து ரசிக்க நான் என்ன மானங் கெட்ட சமூகத்திலா பிறந்தேன்? தெருவிலே உயிரோடு கிடத்திய உடல்கள் மீது கனரக வாகனத்தைச் செலுத்தித் தனது கடூரத்தைக் காட்டிய காட்சியைக் கண்டு களிக்க நான் என்ன பண்பற்ற ஒரு சமூகத்தின் பிரதிநிதியாகவா இருந்தேன்?கொடூரத்தைப் பார்க்க மனம் இடம் கொடுக்காதபட்சத்திலேயே எனது சன்னங்களை அவனை நோக்கிச் செலுத்த வேண்டிய வனாக மாறிவிட்டேன். என் மீதும், எனது மொழி மீதும், எமது மக்கள் மீதும் அன்பை பொழிந்து இன்றும் எமக்குக் குரல் கொடுப்பதற்காகக் காத்திருக்கும் என் அன்பு தமிழ்நாட்டு நெஞ்சங்களே நான் செய்தது தவறாயின் மன்னிப்பீர்களாக!

எம்மை எவன் நிந்தித்தானோ? அவன் கால் வருடி கட்டுகின்ற கலாசார மண்டபம் எதற்காக. அவன் காயத்தைப் போக்குவதற்காகவா? அவன் தயவில் எமக்கேன் சங்கீதம்? அவனை மறைக்க ஏன் பாட்டும், கூத்தும்? இன்னும் அவன் நலனில் அக்கறை கொண்ட அரசியல் நெஞ்சங்களே! தயவு செய்து நாம் துயிலும் இல்லங்களை மிதிக்காதீர்கள். எம்மை நோக்கி வரவேண்டாம். எமக்குக் கல்லறைகள் தேவை இல்லை. மண்ணோடு மண்ணாகத் துயில்கின்ற எமக்கு உங்கள் மரியாதை தேவை இல்லை. நீங்கள் எம்மைநோக்கி வராது இருப்பீர்களாயின் அதுவே நீங்கள் எமக்குச் செய்கின்ற ஆன்ம சாந்திப் பிரார்த்தனையாகும்.

மாவீரர் 3

போர்க் களத்தில் நான் நான் எதிரியை நுழைய விடாது ஓமந்தைக் காவலரணைக் காத்திருந்த பொழுது எங்கோ இருந்து வந்த சன்னம் என்னை துளைத்துவிட்டது. நான் குறிவைக்கப்பட்டது எதிரியால் அல்ல. சொன்னால் நம்ப மாட்டீர்கள். என்னை சுட்டுக் கொன்றவன் எம்மவன் -எதிரிக்கு எடுபிடியாய் மாறியவன். அவனது நலனை மேம்படுத்தக் காத்திருந்தவன். அவன் தனது சுயநலத்திற்காய் எதிரியோடு கைகோர்த்தவன். தமிழினத்தையோ தான் சார்ந்தவர்களையோ காப்பற்ற அல்ல. தன்னைக் காப்பாற்றப் புறப்பட்டவன் தான் கொடுத்த வாக்குறியை நிறைவேற்றத் திராணியற்றபோது தன் இயலாமையை மறைக்க எமது எதிரியோடு கைகோத்தவன். கைக் கூலியாய் அவன் கடந்த நாட்கள் கொஞ்சநஞ்சமல்ல. எமது தலைமை இல்லாதபோது சாத்தியமற்றவர்களாக இருந்த இவர்களை இப்போது கட்டி அரவணைத்திருக்கின்ற அரசியல் பெருந்தகைகளே! நீவிர் வாழ்க! உங்கள் தமிழ்பணி வாழ்க! அந்த ஒட்டுக்குழுக்களை ஏன் அரவணைத்தீர்கள் என்பது இப்போதுதான் புரிகிறது. நீங்களும் அவர்களாய் மாறிவிட்டதே வரலாறு. அவன் நேரடியாகவே காட்டிக் கொடுத்தவன். நீங்கள் அதைத் திரைமறைவு நாடகமாக அரங்கேற்றுவதே உங்கள் திறமை.

உங்கள் சுகபோகத்திற்காக ஒட்டு மொத்தத் தமிழ் சமூகத்தை அடைமானம் வைத்திருக்கின்ற நீங்கள், உங்கள் சுகபோகத்திற்காக எதிரியின் நலன் காக்கவெனப் புறப்பட்ட நீங்கள் வேறொரு எண்ணத்தோடும், இலட்சியத் தோடும் மரணித்த எங்களை நோக்கி ஏன் வருகிறீர்கள்? நாங்களும் நீங்களும் கொள்கையில் எதிரும் புதிருமாக மாறிவிட்ட போது எங்களை நீங்கள் சொந்தம் என்பது எதற்காக? மிகவும் மோசமான காரியத்தை ஏன் செய்கிறீர்கள்? எமது கல்லறைகளில் உங்கள் கரங்கள் படுவதையே விரும்பாத எங்கள்மீது ஏன் இன்னும் அன்போடு வருகிறீர்கள்? புரிகிறது! தேர்த்தலுக்கான உத்தி இது. இன்னும் மக்களை ஏமாற்றக் கற்ற கலை இது.

மாண்புமிகு அரசியல் தலைவர்களே! எமது மண்ணில் கால்பதித்து துயிலும் இல்லங்களை மாசுபடுத்தாதீர்கள். வேண்டுமானால் மக்களாக வாருங்கள். நாம் மீண்டும் விழிக்கும் அந்தச் சில கணங்களில் அரசியல் செய்வபவராக வர வேண்டாம்.

மாவீரர் 4

நான் நிராயுத பாணியாக நின்றபோது குறிவைக்கப்பட்டேன். குறி வைத்தது எதிரியல்ல. மண்டையன் குழுவால் என்னை நோக்கி சன்னங்களை ஏவியவர்கள். அவர்கள் அம்புகள் ஏவியவர் இன்று தமிழுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்றவர். தமிழ் பாதுகாவலன் என்று சொல்லிக் கொண்டு அரசியலில் பவனி வருபவர். தமிழ் தினசரிகளை எழுத்துக்களால் நிரப்பிக் கொண்டிருப்பவர்.

ஐயா! அன்று உங்களிடம் கேட்க வாய்ப்பில்லாததால் இன்று கேட்கிறேன். நீங்கள் அந்தக் குழுவின் தலைவராக இருந்து எத்தனையோ இளைஞர்களைக் கொன்று குவித்ததன் நோக்க மென்ன? யாருக்காகச் செய்தீர்கள்? எதற்காச் செய்தீர்கள்? கடந்த தேர்த்தலில் மக்கள் தங்களை நிராகரித்த பொழுதே நீங்கள் அரசியலைவிட்டு ஓடவேண்டியவர்கள் ஓடியிருந்தால் மக்கள் மனதில் இடம்பெற்றிருப்பீர்கள். இன்னும் அரசியலில் அழுங்குப் பிடியாய் இருப்பது எதற்காக. பத்தோடு பதினொன்றாய் துரோகப் பட்டியலில் இடம்பிடிப்பதற்காகவா?எதிரிக்கு எதிரி நண்பன் என்ற கோட்பாட்டோடுதானே இயங்கினீர்கள்.

ஒருகாலத்தில் எதிரியாக எங்களை எண்ணித்தானே ஏதுமறியா அப்பாவிகளைக்கூட இரக்கமின்றிக் கொன்றொழித்தீர்கள். இப்போது எப்படி நீங்கள் எமது நண்பராகலாம்? நீங்கள் நம்மவர் இல்லை. அதிலே நாங்கள் தெளிவாக இருக்கிறோம். அரசியலைச் செய்யுங்கள். நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் எங்கள் மீது நடந்து, எங்களைக் கேடயமாக வைத்துச் செய்கின்ற அரசியலை தயவு செய்து நிறுத்துங்கள்.

நாங்கள் துயில்கிறோம். நிம்மதியாகவல்ல. எமது நினைவுகள் இன்னும் விழித்துக் கொண்டே இருக்கிறது. கனவுகள் நனவாகும் வரை எமக்கு நிரந்தரமான உறக்கம் இல்லை.

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

1




மாவீரர் வாரம் கடந்த வாரம் ஆரம்பமாகியது. மூகவலைத்தளப் பதிவர்கள் எழுச்சியுடன் வரவேற்றார்கள்.

தமிழர் வீரத்தின் அடையாளமான மாவீரர்கள் பற்றிய குறிப்புகள், கவிதைகள், துயிலும் இல்லப் படங்கள், புலிக்கொடி, வரலாற்று சம்பவங்கள் எனப் பதிவர்களின் பக்கங்களில் இடம்பெற்றவை பல எழுச்சியைக் வெளிப்படுத்தின.

மேலும் இம்முறை மாவீரர் வாரத்துக்காக துயிலும் இல்லங்களில் துப்புரவுப் பணி, அதில் தங்களின் பணி, துயிலும் இல்லங்களின் இன்றைய நிலை என்பவை தொடர்பிலும் பதிவுகள் இடம்பெற்றன.

மாவீரர் வார ஆரம்பமான 21 ஆம் நிகழ்வுகளின் படங்களும் சமூகவலைத்தளத்தில் இடம்பெற்றிருந்தன.

2




சர்வதேச ஆண்கள் தினம் கடந்த வாரத்தில் வந்தது. நமக்கு நாமேதான் எல்லாம் என்ற பாணியில் பலரும் தங்களுக்குத் தாங்களே வாழ்த்துத் தெரிவித்தார்கள். அந்த வாழ்த்துக்கள் நகைச்சுவையே இழைந்தோடியது.

என்னதான் ஆண்கள் அவ்வாறு பதிவுகளைப் பதிந்தாலும், இம்முறை பல பெண் பதிவர்கள் ஆண்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

ஆண்களின் தியாகம், பெருமை இடம் பிடித்ததில் அவர்களின் ஆளுமை பற்றியும் பல பெண்களின் பதிவுகளில் இடம்பிடித்தன.

3




சமூகவலைத்தளத்தில் எப்போதும் கொதித்துக் கொண்டிருப்பவர்கள் இரு சாரார்தான். ஒரு சாரார் தீவிர கூட்டமைப்பு ஆதவாளர்கள், மற்றையவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்.

அண்மையில் நிகழ்வு ஒன்றில் முதலமைச்சர் விக்னேஸ்வரனை தமிழ்த் தேசியம் பேசுவோரையும் விவாதத்துக்கு வருமாறு பகிரங்கமாக அழைப்பு விடுத்தார். முதல்வர் ஆதரவு, எதிர் அணிகள் இதை வைத்துக் கொண்டு அதகளப்படுத்திய நிலையில், முன்னணியை சேர்ந்த சட்டத்தரணி சுகாஸ் விவாதத்துக்கு தான் தயார் எனக் கூறியிருக்கிறார். இப்போது சமூகவலைத்தளங்களில் சூடாக ஓடிக் கொண்டிருப்பது இவர்களின் விவாதத்துக்கான அழைப்புப் பேச்சுத்தான்.

அப்பா இன்னைக்கு டீச்சர் அண்டார்டிகா எங்க இருக்குனு கேட்டாங்க....ப்பா.....





அடப்பாவமே, சின்ன வயசுல என்கிட்டையும் இதைத்தான் கேட்டாங்க.... இன்னுமா கண்டுபிடிக்க முடியாம தேடிகிட்டு இருக்காங்க.....

டேஸ்டே இல்லாத சட்னிய ஏன்டா நிறைய ஊத்தி சாப்பிட்ட?




இல்ல மச்சி, மீதி ஆச்சுன்னா என் பொண்டாட்டி ஃபிரிட்ஜ்ல வச்சு அதையே காலைலயும் தருவா..

நம்ம சந்தோசத்தை துக்கமாகவும், நம்ம துக்கத்தை சந்தோசமாகவும் எடுத்து கொள்பவர்களே....




" சொந்தக்காரர்கள் "....

நான் கூட எதோ தலை டயர்ல மாட்டிக்கிச்சுனு நினைச்சுட்டேன்.....



அடேய்....உங்க செல்பி அலப்பறைக்கு ஒரு அளவே இல்லையாடா...

நீ படிக்கவே லாயக்கு இல்லே... மாடு மேய்க்கத்தான் லாயக்கு




சார், மாடு மேய்க்க லாயக்கில்லைன்னுதான் எங்கப்பா என்னை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினாரு

அன்று வியந்து பார்த்த விமானம் இன்று சாதாரணம்...




அன்று சாதரணமாக பார்த்த வண்ணத்துப்பூச்சி இன்று வியப்பாகிப் போனது.!

எல்லாத்தையும் மறந்துட்டு திட்டு வாங்குறது ஆண்..




எல்லாத்தையும் ஞாபகம் வச்சுகிட்டு திட்டுறது பெண்..

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவோம்

## நவம்பர் 27

நமக்காக செங்குருதி சிந்தி, செங்களத்தில் போரிட்டு மடிந்த மாவீரர்களை நினைவேந்தும் நாள். நமக்காக வாழ்ந்து நமக்காகவே போராடி நமக்காகவே மரணித்தவர்களை நினைவில் இருத்தும் நாள். எம் இனத்துக்கான அடுத்த கட்ட இலக்கைத் தெரிவு செய்து அதன் வழியே பயணிப்பதற்காக உறுதியெடுத்துக் கொள்ளும் நாள். இந்நாளை கடந்த 8 வருடங்களாக வழமையான எழுச்சியுடன் கடைப்பிடிக்க முடியவில்லை.

ஆனாலும் தடைகளின் மத்தியிலும் நினைவுகூர்ந்தோம். தடுக்க அரசாங்கம் ஆயிரம் வழிகளைப் கையாண்டாலும் ஏதோ ஓர் விதத்தில் நமக்காக மாண்ட வீரர்களை நினைவுகூர்ந்தோம். கடந்த ஆண்டு ஓரளவு சுதந்திரமாக நினைவுகூர்ந்தோம். ஆனால் அதை சில அரசியல்வாதிகள் தங்களின் வாக்குவங்கிக்காகவும், சுயபிரபலத்துக்காகவும் பயன்படுத்தியமை வேதனை தந்தது. இதனால்தான் இம்முறை இளைஞர்கள் நினைவேந்தல் பொறுப்பைத் தலையில் சுமந்துகொண்டனர்.


இம்முறை தடைகளின்றி மாவீரர் நாளை துயிலும் இல்லங்களில் எழுச்சியாக நினைவுகூரலாம் என்ற நிலையில்தான், அரச இயந்திரங்கள் புதிய பொறிமுறையை கையாண்டிருக்கிறார்கள். அதன் விளைவு திடீரென வீதிகளில் விசேட அதிரடிப் படையும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருக்கிறார்கள். மாலைப் பொழுதுடனே மக்கள் வீட்டுக்குள் முடங்கும் செயல்கள் அரங்கேறுகின்றன. இது திட்டமிட்ட செயலா? இல்லையா? என்பது தெரியாத போதும் மக்கள் மறைமுக அச்சுறுத்தலுக்கு உட்படுகிறார்கள், அஞ்சுகிறார்கள் என்பதை மறுத்துவிட முடியாது.

இந்த ஏமாற்று அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து மக்கள் மாவீரர் நாள் நினைவேந்தலில் பங்கேற்க மாட்டார்கள் என்பதே அரசாங்கத்தின் எண்ணம். அப்படியே பங்கேற்றாலும் அது சிறு தொகையினரே என்பதைக் காட்டி, தமிழர்கள் இலங்கையராகவே இருக்க விரும்புகிறார்கள். எங்கள் ஆட்சியில் அவர்களுக்கு எந்தக் குறைவும் இல்லை. அவர்கள் நிறைவு பெற்றிருக்கிறார்கள். அதனால்தான் அவர்களுக்காகப் போராடி வீழ்ந்த வேங்கைகளை மறந்து விட்டார்கள் எனப் பிரச்சாரம் செய்யவும், அதன்மூலம் எமது சுயாட்சி கனவை இல்லாது செய்துவிடவும் நினைத்திருக்கிறார்கள்.

எங்கள் இனம் சுதந்திரமும் உரிமைகளும் பெற்று தன்னைத் தானே ஆள வேண்டும் என்ற கனவுடன் வாழ்ந்தவர்கள் மாவீரர்கள். தன் இனத்தின் அடுத்த சந்ததி அடிமையாக இருக்கக்கூடாது என்பதே அவர்களின் கனவு. தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவருக்குள்ளும் வீரத்தையும், விவேகத்தையும், உணர்வையும் ஊட்டியவர்கள் மாவீரர்களே. இனம் வாழ தம்மை கொடுத்த அந்த சத்திய வீரர்களை - தெய்வங்களை நினைந்து ஒன்றாக தீபம் ஏற்றிப் பிரார்த்திப்போம். எங்கள் உரிமைகள் எங்களுக்கு வேண்டும் என்பதை அரசாங்கத்துக்கும் தென்னிலங்கைக்கும் காட்டுவோம். எங்களுக்கான உரிமைகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. என்பதை ஒன்றிணைந்து சர்வதேசத்துக்கு காட்டுவோம். இவை எல்லாவற்றையும் விட மேலாக எங்களுக்காக வாழ்ந்த அந்தத் தெய்வங்களிடம் பிரார்த்திப்போம். எங்களுக்காக அவர்கள் எதுவும் செய்யத் தயங்காதவர்கள்...!

எனவே நவம்பர் 27 மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு சென்று எம் வரலாற்று கடமையை நிறைவேற்றுவோம்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




# நினைத்தோம்

'பிரபா கரன்" என்னும் பிள்ளை வேங்கை
உரமாய்த் தமிழினம் உய்ய உயிர்தந்து
திருவார் தமிழீழம் தேடப் பிறந்தான்!
பெருமானத் தமிழன்! பெறலரும் வீரன் - அவன்
உருவான நாளெண்ணி ஊதாயே சங்கம்!
ஓங்குகவன் புகழென்றே
ஒலிப்பாயே முரசம்!

இந்தியப் பெரும்படைக்கு எதிர் நின்ற வெம்புலி!
கொந்திய நெஞ்சாங் குலையினி லிருந்து, அவன்
சிந்திய இரத்தத்தால் சிவந்தது தமிழீழம்!
பிந்திய தமிழ் மறம் பேணிப்புரந் தான்! - அவன்
வந்தலர்ந்த நாள் மகிழ்ந்து பாடுகவே வாழ்த்தும்
வளர்க அவன் புகழென்றே
மீட்டுகவே யாழும்!
மறந்த தமிழினத்தின் மறஞ்சொன்ன வேந்தன்!
இறந்த இனப்புகழை ஏற்றிவைத்த வீரன்!
திறந்த மார்பொடு பகையினைத் தீர்த்த
சிறந்த இராவணற்கும் சிறப்பளித்த தமிழன்- அவன்
பிறந்தொளிர்ந்த நாள் நினைந்து பேரிகையே
பெற்றான்காண் பெரும்புகழும்! முழங்கு!
பிளிறுகவே வேழம்!

பெருஞ்சித்திரனார் 1989



ஐய நின் மேனியின் அழகதும்,
நெஞ்சினில்
அடர்ந்துள்ள வீரத்தின் அழகும்,
அன்னைமண் தன்னையுன் ஆயிரம் கரங்களால்
அரவணைக் கின்ற பேரழகும்,
வெய்யவர் கண்டுநீ வெகுண்டெழும் போதினில்
விரிகின்ற கோபத்தின் அழகும்,
விடுதலைக் கானநேர் வீதியை என்றுமே
விட்டறி யாதநின் அழகும்
பொய்யறி வின்றியே போரறிவோடெமைப்
புலியென நிமிர்த்திய அழகும்,
புவியினில் இன்றுள தமிழரின் வாயெல்லாம்
பேசிடும் உன்பெயர் அழகும்
வையகம் உள்ளள வாகுக, அதுவரை
வயதுனக் காகுக அழகா.
வாயெடுத் தாயிரம் வாழ்த்துரைத்தோம், தமிழ்
வாசலில் வாழுக தலைவா.

புதுவை இரத்தினதுரை





இனம் தெரியாத
தவிப்பு.
எப்படி பிறந்தநாள்
வாழ்த்துச்
சொல்வதென்று...
இனம் தெரிய
வைத்தவனுக்கு!

கவிஞர் அறிவுமதி

கடந்த காலங்களில் நவம்பர் 26 ஆம் நாள் பத்திரிகைகளில் வெளியான கவிதைகள் இவை.



# துரித உணவுகள் உணவுப் புரட்சியின் மாயவலை

– விக்ரம்குமார் –

துரித உணவுகள்... இவற்றின் பாதிப்புகளிலிருந்து தப்பிக்க, மேலை நாடுகளே இயற்கையான உணவுகளைத் தேடத் தொடங்கிவிட்டன. நாமோ இன்னமும் ஃப்ரைட் ரைஸ், பர்கர், பீட்ஸா... என துரித உணவுகளின் மாய வலை யில் சிக்கிய மான்களாக அவதிப் படுகிறோம். விரைவில் இந்த மாய வலையைக் கிழித்துக்கொண்டு வெளிவராவிட்டால், நோய்களின் கூடாரமாக மாறிவிடும் நமது உடல்.

### வரலாற்றுப் பாதை

துரித உணவுகளின் வரலாற்றுப் பாதையை உற்றுக் கவனித்தால், அவற்றுக்கும் நமது வரலாற்றுக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது. வேறு சூழலில் வாழும் மக்களின் உணர்வுடனும் வாழ்வுடனும் தொடர்புகொண்டிருக்குமே தவிர, எமது வாழ்வுக்கும் உணர்வுக்கும் அவற்றோடு எந்தச் சம்பந்தமும் இருக்காது. ஆனால், இப்போது இருக்கும் நிலைமையைப் பார்க்கும்போது, சீராக பயணித்துக்கொண்டிருக்கும் எமது உணவு வரலாற்றுப் பாதை, இனி திசை மாறிவிடுமோ என்ற அச்சம் ஏற்படத்தான் செய்கிறது. எமது பாரம்பரிய வரலாற்றுப் பாதையில் பயணித்து வரும் உணவுகள், நிச்சயமாக நோய்களை உண்டாக்காது. ஆனால், சமீபத்தில் நுழைந்து உணவுப் புரட்சி ஏற்படுத்திக்கொண்டிருக்கும் துரித உணவுகள் உண்டாக்கும் நோய்களோ எண்ணிலடங்காதவை.

சத்துக்கள் நிறைந்த எமது பாரம்பரிய உணவுகளை அடித்து விரட்டிவிட்டு, துரித உணவுகளைப் பெருமைப்படுத்துகிறோம். ஹமினி சைஸ் சீஸ் சண்ட்விச்', மீடியம் சைஸ் பர்கர்', லார்ஜ் சைஸ் ஃபேமிலி பீட்ஸா'... என சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சைஸ் வாரியாகப் பிரித்து உண்கிறோம். நோய்களோ குழந்தைகள், பெரியவர்கள் என்று வயது வித்தியாசமெல்லாம் பார்ப்பதில்லை. எழுபது வயது முதியவர் மாரடைப்பால் மரணம் என்பதற்கும், இருபத்தைந்து வயது இளைஞர் மாரடைப்பால் மரணம் என்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது?! தவறான உணவுப் பழக்கத்தால், இளம் வயதினருக்கும் மாரடைப்பு ஏற்படும் அதிர்ச்சியான செய்திகள் எமது செவிகளில் கேட்கத் தொடங்கிவிட்டன. தவறான உணவுப் பட்டியலில், துரித உணவுகள் முக்கிய பங்கு வகிப்பவை.

### சிறுவர்களுக்கும் நீரிழிவு

துரித உணவுகள் நமது சுவை உணர்ச்சிகளுக்கு மகிழ்ச்சியூட்ட மட்டும் தயாரிக்கப்படுபவை. உடல்நலத்தை மேம்படுத்தக்கூடிய எந்தவிதமான ஆரோக்கியக் கூறுகளும் அவற்றில் இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. கலோரிகள் நிறைந்த உணவுகளாக இருப்பதால், உடலை விரைவாக பருக்கச் செய்யும் திறன் வாய்ந்தவை. உடல்பருமன் நோய் அதிகரிப்பதற்கு இவை முக்கிய பங்காற்றுகின்றன. ஒரு முழு பீட்ஸா உட்கொண்டால், உடலில் சேரும் கலோரிகளைக் கரைக்க பல கிலோமீற்றர் தொலைவு வேகமாக ஓட வேண்டியிருக்கும். நாம் முதலில் சில தூரமாவது தினமும் நடக்கிறோமா என்பதே கேள்விக்குறி. பின் எப்படித் தேவையில்லாமல் அதிகரித்த கலோரிகளை வெளியேற்றுவது. இந்த கலோரிகள், உடலின் கொழுப்பு சேர்மானத்தை அதிகரிக்கச்செய்து, கடுமையான பாதிப்புக்களை உண்டாக்கும்.

அவசரத்துக்கு உடனடியாகக் கிடைக்கும் துரித உணவுகள், அவசர அவசரமாக நோய்களை உண்டாக்கும்.

இன்சுலின் சுரப்பதில் பாதிப்பை உண்டாக்கி, நீரிழிவு நோயை துரித உணவுகள் உண்டாக்குவதாக அமெரிக்காவின் `National Institutes of Health (NIH)' வெளியிட்ட ஆராய்ச்சி முடிவு தெரிவிக்கிறது. பத்து வயது சிறுவனுக்குக்கூட இரண்டாம் வகை நீரிழிவு நோய் (Type – 2 Diabetes) வருவதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகம். பிள்ளைகள் தொடர்ந்து துரித உணவுகளைச் சாப்பிடும்போது, உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் கிடைக்காமல், ஊளைச்சதை மட்டுமே வளரிளம் பருவத்தில் அதிகரிக்கும். உடல் வளர்ச்சிரீதியில் பல செயற்பாடுகள் பாதிக்கப்படும்.

பாடசாலைக்குச் செல்ல அடம்பிடிக்கும் குழந்தைகளை சமாதானப்படுத்த, போகும் வழியில் பீட்ஸா, ஹம்பேர்களை வாங்கிக் கொடுக்கும் சில பெற்றோர்கள், தங்கள் வழிமுறையை மாற்றிக்கொள்வது நல்லது. நீங்கள் குழந்தைகளைச் சமாதானப்படுத்துகிறீர்கள் என்று நினைத்துக்கொண்டு, அவர்களுக்கு நோய்களை வாங்கிக் கொடுக்கிறீர்கள் என்று அர்த்தம். பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளுக்கு எதிரி பர்கர்களை ஊட்டி வளர்த்தால், பர்கர் போன்ற உருண்டையான தோற்றத்தில் உங்கள் குழந்தைகளை விரைவில் பார்க்கலாம். கண்டிப்புடன் இவை போன்ற உணவுகளுக்கு தடை விதிப்பதில் எந்தப் பாரபட்சமும் பெற்றோர்கள் காட்டக் கூடாது.

### உப்பும் சீனியும்

துரித உணவுகளைத் தொடர்ந்து சாப்பிடும்போது, இரத்தக் குழாய்களில் கொழுப்புத் திட்டுக்கள் படிந்து, அவற்றின் சுற்றளவைக் குறுக்கி, குருதி சுற்றோட்டத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தி, இதய நோய்களை உண்டாக்கும்.

இதிலிருக்கும் உப்புகள் காரணமாக உயர் இரத்த அழுத்தம் வருவதற்கான சாத்தியங்கள் அதிகம். மருத்துவர் அறிவுறுத்தலின் பேரில் நேரடியாக உப்பின் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளும் நடுவயது உயர் இரத்த அழுத்த நோயாளிகள், மறைமுகமாக உப்புகள் நிறைந்த துரித உணவுகளை அதிகமாகச் சேர்த்துக்கொள்வது அறியாமை. அளவுக்கு அதிகமாக உப்புகளோடு வெள்ளைச் சர்க்கரையும் கலந்த சுவையூட்டும் உணவுகள், மனதுக்கு களிப்பை உண்டாக்கி, ஆரோக்கியத்துக்கு வேட்டுவைத்து விடும்.

### பாதிக்கப்படும் ஹோர்மோன்

ஹோர்மோன் சமநிலையைத் தகர்த்து, உடலின் செயற்பாடுகளில் பல்வேறு மாறுதல்களை துரித உணவுகள் உண்டாக்கிவிடுகின்றன. இளம் பெண்களுக்கு கருப்பைக் கட்டிகள் அதிகரிப்பதற்கு மிக முக்கியக் காரணம் 'ஜங் ஃபுட்ஸ்' எனப்படும் துரித உணவுகள்தாம். எள்ளுருண்டைகளையும், உளுத்தங்களியையும் அதிகமாகச் சாப்பிட்ட முந்தைய தலைமுறைப் பெண்களுக்கு கருப்பைக் கட்டிகள் என்றால் என்னவென்றே தெரிய வாய்ப்பில்லை.

முறையான உணவியலை கற்றுக்கொடுக்கவேண்டிய பாடசாலைகள் தவறான உணவுகளை அறிமுகப் படுத்துகின்றன. பாடசாலை உணவகங்களில் அதிகம் விற்பனையாவது எண்ணெயில் பொரித்த சிற்றுண்டி, நொறுக்குத்தீனி வகையறாக்களும், பன்னாட்டு குளிர்பானங்களும்தான். உணவுப் பட்டியலில் தவறாமல் இடம்பெறுகின்றன. எனவே மறுபுறம், பாடசாலைகளில் கீரைகள், காய்கறிகள், முட்டைகள் அடங்கிய எளிமையான சத்துணவுகள் அவசியம். பாடசாலைகளில் சிறந்த உணவியலை கற்பிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் சிறந்த உணவு வகைகள் கிடைக்கவும் வழிவேண்டும்.

### தவிர்ப்போமே...!



பீட்ஸா, பர்கர்களில் இருக்கும் இறைச்சித் துண்டுகள் எப்போது சமைக்கப்பட்டது என்று நம்மால் உறுதியாகச் சொல்ல முடியுமா? துரித உணவுகளில் சேர்க்கப் படும் இரசாயனங்களால் நமது உடலில் உண்டாகும் மாறுதல்களை அறிந்துவைத்திருக்கிறோமா? ஒரு மனித உடலுக்குள், பல வகையான நோய்கள் வாடகையின்றி குடியிருப்பதற்கான காரணத்தை ஆராய்ந்தோமா? உடல் உழைப்புமில்லாமல், உணவுத் தேர்வும் சரியாக இல்லாமல், அறியாமையால் எமது உடலைக் கபளீகரம் செய்துகொண்டிருக்கிறோம். மாற்றம் தேவை. கொஞ்சம்கூட யோசிக்காமல், துரித உணவுகளை நம் எண்ணங்களில் இருந்து அழித்தாக வேண்டும். ஒவ்வொருவரும் துரித உணவுகளின் பாதிப்புகளைப் பிறருக்கு எடுத்துக்கூறுவது சமுதாயத்துக்கு செய்யும் நல்ல சேவையாக இருக்கும். தவறான உணவியலுக்கு எதிராக பிரசாரம் மேற்கொண்டு சமூக சேவை செய்வோம்!



# புதுவிதி நடத்தும் பரிசு மழை போட்டி - 01 -

## இரண்டாவது சுற்றின் இரண்டாம் பரிசுக்கான கேள்வி

1. கடலின் நிறம் என்ன?

2. தமிழரின் பாரம்பரிய இசைக்கருவியின் பெயர் என்ன?

3. பானை, சட்டி செய்வதற்கு உபயோகப்படுத்தும் மண் எந்த வகைப்பட்டது?

4. சுற்றுப் புறச் சூழல் மாசு படுவதைத் தடுக்க அரசாங்கம் அண்மையில் தடை செய்த பொருளின் தமிழ் பெயர் என்ன?

01. ..............................

02. ..............................

03. ..............................

04. ..............................

**போட்டிக் கூப்பன்**

போட்டி : முதலாம் சுற்றின் முதலாம் பரிசு

பெயர் : ..............................

முகவரி : ..............................

தே.அ.அ.இல : ..............................

பாடசாலை : ..............................
(மாணவராயின்)

தொலைபேசி இல : ..............................

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி : 02.12.2017**

**போட்டி விதிமுறைகள் :-**

- ✓ விடைகளை மேலே தரப்பட்ட கூப்பனில் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும்.
- ✓ புதுவிதி/சகோதர பத்திரிகையின் பணியாளர்கள், உறவினர்கள் இப்போட்டியில் பங்கேற்க முடியாது.
- ✓ பரிசிலுக்கு தகுதி பெறும் பட்சத்தில் தங்கள் ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்துதல் அவசியம்.
- ✓ குலுக்கல் முறையிலேயே பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.



**அனுப்ப வேண்டிய முகவரி**

புதுவிதி
கரடிப்போக்கு சந்தி,
கிளிநொச்சி.

உங்கள் அருகில் உள்ள முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் சேர்ப்பிக்க முடியும்

# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

(தொடர் 13)



தமிழர் பெருமை, பழைமை, நிறை புண்ணிய பூமியான இப்பகுதிகளில் தோன்றிய விடுதலை வேட்கை நிறை மாந்தர்களால் உலகே ஒரு யுகம் தமிழர் வரலாற்றைத் திரும்பத் திரும்ப உற்று நோக்கியமை யாவரும் அறிந்ததே.

வடமராட்சியில் அமைந்துள்ள வல்வெட்டித்துறை தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் பிறப்பிடம் ஆதலால் உலகின் பார்வையைக் கவருமிடமாக விளங்கியிருந்தது. பொதுவாக வல்வெட்டித்துறை பழங்காலம் தொட்டு வீரம் விளை பூமியாகத் திகழ்ந்து வந்திருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது.

# வீரம் விளை வல்வையும் அதில் கம்பர்மலையும்

- வல்வை ரவி -

அதன் பின்னணியிலேயேதான் 20 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் இலங்கை அரசாங்கத்தை நீண்டகாலம் கதிகலங்க வைத்த சம்பவங்கள் நிகழ்ந்தேறின. இதற்கும் வல்வையில் அவதரித்த வீரவேங்கைகளுக்கும் தொடர்பிருப்பதனைக் காணலாம். ஈழத்தில் மட்டுமின்றி உலகின் எந்த மூலையிலும் தமிழர் பாரம்பரிய மண் வாசனையைக் கமழச் செய்த தேசமாக வல்வை விளங்கியுள்ளது. வல்வெட்டித்துறையின் ஆலடி என்ற பகுதியானது நவீனகால வரலாற்றில் முக்கியமானதொரு இடமாக விளங்கியுள்ளது. அதாவது பெரியதொரு ஆலமரம் இப்பகுதியில் இருந்ததனால் அப்பகுதியை பொதுவாக எல்லோரும் ஆலடி என அழைத்து வந்தனர். இப்பகுதியில்தான் உலகே வியந்த உத்தம தமிழர் தலைமகன் தேசத் தலைவர் பிரபாகரன் அவதரித்தார்.


வல்வெட்டித்துறையில் உள்ள சிவன் கோயிலின் எஜமானரான வேலுப்பிள்ளை அவர்கள் மக்களுக்குப் புதிதாகக் காணிகள் வழங்கும் அரச உத்தியோகத்திலிருந்தார். இவர் தற்காலத்து அரசியல் தலைவர்களைப் போலன்றி, சமூக அக்கறையுடையோனாய் அதிகமான மக்களுக்கு புதிதாகப் பல நிலங்களை (சாதி, மத, பேதமின்றி) வழங்கி தமிழினத்தைக் குடியேற்றினார். காடுகளை கழனியாகளாக்க உழைத்தார். இத்தகைய புண்ணியவானின் மகனாகத் தோன்றியவரே உலகம் வியந்த தலைவன் பிரபாகரன்.

ஆலடிப்பகுதியில் இருக்கின்ற வீடு தலைவர் பிரபாகரனது என அனைவரும் அங்கலாய்த்து ஓடித் திரிந்த காலமொன்று உள்ளது. உண்மையில் அது அண்ணனின் வீடல்ல அது அவரின் சகோதரியினதே. விளங்கக் கூறின் ஆலடிப் பகுதியில் தலைவர் பிறந்து வளர்ந்திருக்கலாம். ஆனால் உலகில் எந்தவொரு மூலையிலும் தனக்கோ அல்லது தனது குடும்பத்துக்கே சிறு காணியைக் கூட அவர் வைத்திருக்கவில்லை நம் தேசத் தலைவன்.

ஆரம்பத்தில் சிவகுரு வித்தியாலயத்தில் கல்வி கற்றவர் அக்காலத்தில் அதிகமான நூல்களை விரும்பிக் கற்றார். வீட்டில் அதிகளவான வரலாற்று நூல்களை சேர்த்து சிறு நூலகத்தையும் உருவாக்கியிருந்தார். இதனால்தான் அவர் அடிக்கடி 'வரலாறு எனது வழிகாட்டி" என்பார். இத்தகையதொரு வரலாற்றுத் தலைவன் அவதரித்த தேசமே வல்வை.

அண்ணன் பெருமை கூறவும் வார்த்தைகள் போதாதது போல் இப்பகுதியின் கீர்த்திகள் கூறவும் எளிதில் முடியாது. பொதுவாக வல்வையில் பெரியோர்களையும் வணங்கும் பண்பாடும் நிலவி வருகின்றது. குறிப்பாக ஆலடிப் பகுதியில் எம்.ஜி.ஆருக்கு சிலையமைத்து இருப்பதைக் கூறிக்கொள்ளலாம். மேலும் ஆழக்கடல் ஓடித் திரவியம் தேடியதுடன் கப்பல்களையும் உருவாக்கியவர்கள் இவ்வூர் மக்களே.

வல்வெட்டித்துறைக்க அருகே உடுப்பிட்டிக் கிராம சேவகர் பிரிவில் இருக்கும் கிராமமே கம்பர்மலையாகும். இதன் பழைய பெயர் கொம்பர் மூலை. வடகரைப் பகுதிகளிற் காணப்பட்ட யானைகளைப் பிடித்து அவற்றின் மதத்தை அடக்கி, கட்டி வைத்த மேட்டு நிலம் கொம்பர் மூலை (கொம்பர் - யானை) எனப்பட்டது. இக்கொம்பர் மூலையே பின்பு கம்பர்மலையாக மாற்றம் பெற்றிருக்கலாம். இதேவேளை தமிழர் சரித்திரத்தில் பல வீரமறவர்கள் தோன்றிய தேசமாக இப்பகுதி அமைகின்றது. தமிழர் உரிமைப் போராட்டத்தின் முதல் வித்து சங்கர் (சுரேஸ்) எனப்படும் சத்தியநாதன் அவதரித்தமை கம்பர்மலை மண்ணிலேயே. அதேபோல் தமிழீழ விடுதலைப் புலிகளின் நதி, ஆயுதங்களுக்குப் பொறுப்பாளனாகவும், முதலாவது யாழ். மாவட்டப் பொறுப்பாளனாகவும் மத்திய குழு உறுப்பினராகவும் விளங்கிய கப்டன் பண்டிதர் (ரவீந்திரன்) பிறந்ததும் கம்பர்மலையிலேயேதான். இவர்களின் நினைவாலயம் கம்பர் மலைச் சந்தியில் இன்றும் உள்ளது.




வல்வெட்டித்துறையில் உள்ள இன்னொரு பகுதி தீருவில் இதுவும் நம்மின வரலாற்றில் முக்கியமானதொரு மையமாகும். மூத்த தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட போராளிகளது புகழுடல்கள் இவ்வளாகத்தில்தான் தீயுடன் சங்கமமாகின. இதன் தொடர்ச்சியாக அங்கு பெரும் நினைவுத்தூபி அமைக்கப்பட்டிருந்தது. அத்தோடு கேணல் கிட்டு நினைவாகவும் இங்கு ஒரு நினைவாலயம் நிறவப்பட்டு இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

விடுதலைக்கான தேடலாகவே மானிட வரலாறு நகர்ந்து கொண்டிருக்கிறது. நின்றும், நகர்ந்தும், அதிவேகமான பாய்ச்சலுடனும், தேங்கியும், பின்னகர்ந்தும் இந்த விடுதலைக்கான வரலாற்றுத் தேடல் இன்னும் எழுதப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அதேவேளை வரலாறே பிரமித்து நிற்கின்ற உத்தம வீரர்கள் அவதரித்த உலகில் தமிழர் தலை நிமிரச் செய்த மறவர்கள் வாழ்ந்த தேசமான வல்வெட்டித்துறையும் அதனை அண்டிய பகுதிகளும் என்றும் தமிழர் பண்பாட்டின் மண் வாசனையை பரப்பிக் கொண்டே இருக்கும்.

# வாரப்பலன்

### மேடம்
அந்த வாரம் சுக்கிரன் சாதகமாக இருப்பதால் புத்திசாலித்தனம் வெளிப்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். அரசால் அனுகூலம் உண்டு.

### துலாம்
இவ் வாரம் சுக்கிரன் ராசியிலேயே ஆட்சிப் பெற்று அமர்ந்திருப்பதால் தடுமாற்றங்கள் நீங்கும். பிள்ளைகளின் கலை மற்றும் விளையாட்டுத் திறனை வளர்க்க முயற்சி எடுப்பீர்கள். நீண்டகாலப் பிரார்த்தனைகள் நிறைவேறும்.

### ரிஷபம்
இவ்வாரம் புதன் வலுவாக நிற்பதால் எதிர்பார்த்த பணம் வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டு. உறவினர், நண்பர்கள் வீடு தேடி வருவார்கள். கணவன்-மனைவிக்குள் மோதல்கள் வரும். வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள்.

### விருச்சிகம்
இவ்வாரம் சுக்ரனும், புதனும் சாதகமாக இருப்பதால் முகப் பொலிவு கூடும். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வருமானம் உயரும். கணவன்-மனைவி அன்யோன்னியம் அதிகரிக்கும்.

### மிதுனம்
இவ்வாரம் சுக்கிரன் ஆட்சி பெற்றிருப்பதால் எதிர்பாராத வெற்றி கிட்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொத்து, வாகன சேர்க்கை உண்டு. வர வேண்டிய பணத்தைப் போராடிப் பெறுவீர்கள். வீண் பயம், அலட்சியம் வந்துப் போகும்.

### தனுசு
இவ்வாரம் குரு பகவான் வலுவாக நிற்பதால் பெரிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். வெளியூர் பயணம் உண்டு. வாராது என்றிருந்த பணம் வரும். . பழுதாகியிருந்த வாகனம் ஓடும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையைக் கேட்டு நடப்பர்.

### கடகம்
இவ்வாரம் செவ்வாய் வலுவாக இருப்பதால் குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். புது திட்டங்கள் நிறைவேறும். பழைய பிரச்சினைகள் தீரும். வெளிநாட்டில் இருப்பவர்கள் உதவுவார்கள். அரசியலில் செல்வாக்குக் கூடும். பணபலம் உயரும்.


### மகரம்
இவ்வாரம் செவ்வாய் வலுவாக இருப்பதால் மனவலிமை கூடும். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு உண்டு. வழக்கில் இருந்த பயம் விலகும். விலை உயர்ந்த சமையலறை சாதனங்கள் வாங்குவீர்கள்.

### சிம்மம்
இவ்வாரம் சுக்கிரன் சாதகமாக இருப்பதால் நீண்ட நாளாகத் தள்ளிப் போன விஷயங்களை சாமர்த்தியமாகப் பேசி முடிப்பீர்கள். விட்டுச் சென்ற உறவினர்கள் தேடி வருவார்கள். பூர்வீகச் சொத்து பிரச்னையில் நல்ல தீர்வு கிடைக்கும்.

### கும்பம்
இவ்வாரம் குருபகவான் வலுவாக இருப்பதால் புதிய முயற்சிகள் பலிதமாகும். அரையும், குறையுமாக நின்ற வேலைகள் முடியும். கல்வியியளார்களின் அறிமுகம் கிடைக்கும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள்.

### கன்னி
இவ்வாரம் குரு வலுவாக இருப்பதால் சொன்ன சொல்லை நிறைவேற்றுவீர்கள். பணம் வரும். கைமாற்றாக வாங்கியதை கொடுத்து முடிப்பீர்கள். வெளிநாட்டில் இருப்பவர்களின் நட்புக் கிட்டும். குடும்ப வருமானத்தை உயர்த்த முயல்வீர்கள்.

### மீனம்
இவ்வாரம் சுக்கிரன் சாதகமாக இருப்பதால் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். . வேலைத் தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். உறவினர்கள் மத்தியில் இருந்த அதிருப்தி விலகும். சித்தர்களின் ஆசி கிட்டும்





மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு லண்டன் ஒக்ஸ்போட் நகரில் வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.



யாழ்.வல்வெட்டித்துறை , உடுப்பிட்டி வீதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சங்கரின் நினைவிடத்தில் இன்று மாலை பொது மக்கள் இணைந்து அஞ்சலி செலுத்தியுள்ளனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உயிர்த் தியாகங்களைச் செய்த மாவீரர்களுக்கு நினைவேந்தல் செலுத்தும் மாவீரர் வாரம் **21.11.2017** அன்று உணர்வு பூர்வமாக ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகியள்ளது.





கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் TOBACCO UNMASKED என்ற தொண்டர் நிறுவனம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளருக்கு “ஒரு நாள்” கருத்தரங்கை நடத்தினர். புகையிலை பாவனைக்கெதிராகப் போராடும் அந்த நிறுவனம் புகையிலை உற்பத்தியாளர்கள் மற்றும் பாவனையாளர்கள் பற்றிய ஊடகச் செய்திகளையும், கட்டுரைகளையும் சமூக நலன் சார்ந்த வகையில் எப்படி கையானவது என்பது பற்றிய பயிற்சியை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது



சம்பள முரண்பாடு, பதவி உயர்வு, மேலதிக நேரக் கொடுப்பனவு நிலுவை, கைவிரல் அடையாள வருகைப் பதிவேட்டை நடைமுறைப்படுத்த மேற்கொண்ட தீர்மானத்தை நிறுத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதுவும் அரச தாதியர்கள், துணைமருத்துவச் சேவையாளர்கள் 24 மணி நேரப் பணிப்புறக் கணிப்புப் போராட்டம் நடத்தினர்.




# குட்டீஸ்...!

puthuvithi@gmail.com



# இளவரசியும் பதினொரு அன்னங்களும்

அங்கம் 4

இளவரசன் தனக்குத் துணையாக நிற்கிறான் என்ற எண்ணம் எலிஸாவின் மனதில் பெரும் மகிழ்வை ஏற்படுத்தியது. ஆண்துணை என்பது ஒரு பெண்ணுக்கு எப்பொழுதுமே ஒரு பெரிய பலந்தானே. தன் தந்தை, சகோதரர்கள் என்று எவருமே இல்லாத நிலையில் எங்கிருந்தோ ஒரு ஆணழகன் தன்னைத் தேடி வந்து,
இந்தத் திக்குத் தெரியாத காட்டில், தனக்குத் துணையாக நிற்பது , இழந்த அப்பாவையும் சகோதரர்களையும் மீண்டும் அடைந்து விடலாம் என்ற நம்பிக்கையைத் தந்தது.

மீண்டும் குளத்திற்கு சென்று ஆசை தீர நீந்தினாள். அங்கிருந்த முயல்களைக் கொஞ்சி மகிழ்ந்தாள் சுற்றிப் பறந்த பட்சிகளையும், பூத்துக் குலுங்கிய வண்ண மலர்களையும் பார்த்து குதூகலித்தாள்

குதிரையில் சென்று உண்பதற்கு சுவையான பழங்களுடன் திரும்பிய இளவரசன், பிரம்மிக்கத்தக்க அழகோடு, சிரித்துக் கொண்டு வரும் எலிஸாவின் அழகில் மெய்மறந்தான். அவளை அந்தக் மாயக் குளத்து நீர் மேலும் அழகியாக்கி இருந்தது.

அழகாகக் கிளை பரப்பி வளர்ந்திருந்த நிழல் மரத்தின் பெரிய வேர் ஒன்றில் இருவரும் உட்கார்ந்து கொண்டு, வந்த பழங்களைப் பகிர்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள்.
அந்தக் காட்டுக் கனிகள் சுவை மிக்கதாக இருந்தன. குளத்தில் நீச்சல் காலாற நடந்தது மனதில் மகிழ்வு வயிறார உணவு இந்த நான்கின் கலவையில் அவளைத் தூக்கம் தழுவிக் கொண்டது. அவள் கண்விழித்தபோது மேற்கே சூரியன் மெல்ல மறைந்து கொண்டிருந்தான். தன்னைப் பார்த்தபடி பக்கதத்தில் இளவரசன் உட்கார்ந்திருப்பது அவளுக்கு வெட்கமாக இருந்தது. இளவரசன் அவளைப் பார்த்து புன்னகைத்தான். "இளவரசியாருக்கு நல்ல தூக்கத்தான்" என்றான் இளவரசன் சிரிப்போடு! பதிலளிக்க முடியாமல் நாணத்தோடு தலைகுனிந்தாள் எலிஸா. நீண்ட நாட்களின் பின்னர், தன்னை இளவரசி ஒருவர் அன்போடு விளித்தது, மனமகிழ்வைக் கொடுத்தது.
திடீரென எங்கோ பறவைகளின் சிறகொலி காற்றில் கலந்து வந்தது. இளவரசியும் இளவரசனும், சப்தம் வந்த திக்கை நோக்கிப் பார்த்தார்கள். அன்னப் பட்சிகள் கூட்டம்... அவற்றை வழிநடத்தி இன்னொரு பறவைகள் கூட்டம். இங்கிருந்து பறந்து சென்ற பட்சிகள்தான் அன்னங்களைத் தேடிப்பிடித்துக் கொண்டுவருகின்றன என்று எலிஸாவுக்கு தெரிந்தது. அன்னங்கள் 11 அவள் காலடியில் வந்து தரையிறங்கின. பெரிதாகச் சிறகடித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தின. இளவரசன் வியப்போடு இதைப் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென பதினொரு அன்னங்களும் பதினொரு ஆண்களாக மாறி அவன் வியப்பைப் பன் மடங்காக்கின. பன்னிரண்டு ஆண்களும் ஒரு அழகியும் கூட நின்ற காட்சியை சுற்றி நின்ற மலர்கள் தலையாட்டி ரசித்தன.....

எலிஸா மீண்டும் வருவாள்....

## அறிந்து கொள்வோமே

### பழங்கள்

1. நெல்லிக்காய் Gooseberry
2. பலாப்பழம் Jackfruit
3. சீத்தாப்பழம் Custard Apple
4. நாவல் பழம் Jambu Fruit
5. கொய்யாப்பழம் Guava
6. சீமைப்பலா,ஈரப்பலா Bread Fruit
7. விளாம்பழம் Wood Apple
8. கொடித்தோடைப் பழம் Passion Fruit

### மரக்கறிவகைகள்

1. முருங்கைக்காய் Drum Stick
2. கத்தரிக்காய் Brinjal
3. புடலங்காய் Snake gourd
4. பாகற்காய் Bitter gourd
5. பூசனிக்காய் Pumpkin
6. வெண்டைக்காய் Ladies finger
7. மிளகாய் Chillies
8. பயற்றங்காய் Beans
9. மரவள்ளி yam

## வாரம் ஒரு பழமொழி

**ஆயிரம் முறை பொய் சொல்லி கூட ஒ ஒரு கல்யாணம் பண்ணலாம்.**

விளக்கம்: ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணம் பண்ணலாம் என்பதல்ல இதன் பொருள். ஆயிரம் முறை போய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணலாம் என்பதுதான் இதன் உண்மையான பொருள். . அதாவது, நம் உறவினர்கள், நண்பர்களுடன் கொண்டுள்ள பகைமையினால், நம் வீட்டில் நடக்கும் கல்யாணம் போன்ற சுபதினங்களில் நாம் அழைக்காமல் இருப்போம். ஆனால், அப்படி விட்டுவிடாமல் ஆயிரம் முறை போய்ச் சொல்லியாவது அவர்களை அழைத்து நம் வீட்டில் திருமணம் நடத்தவேண்டும் என்பதே உண்மைப் பொருளாகும்.

## அட அப்படியா?

▲ ஓர் ஒட்டகத்தைவிடவும் அதிக நாட்களுக்கு தண்ணீரின்றி எலியால் தாக்குப்பிடிக்க முடியும்.




▲ மரங்கொத்தியால் ஒரு நொடிக்கு 20 முறை மரத்தைக் கொத்தித் தள்ள முடியும்.



▲ ஒட்டகப் பறவை என்று நெருப்புக் கோழி அழைக்கப் படுகின்றது. இது ஒட்டகத்தைப் போல பல நாட்கள் தண்ணீர் குடிக்காமலேயே வாழக்கூடியது என்பதால் அதற்க இந்தப் பெயர்.

▲ காகம் ஒரு மணிக்கு 45 மைல்கள் வேகத்தில் பறக்கும்





ஆன்மீகம் அறிவோம்!

# ஐந்து அப்பங்களும் 2 மீன் துண்டுகளும்

பைபிளின் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து உவமைகளாகவும் உருவகங்களாகவும் கூறிய 'பைபிள் கதைகள்" உலகம் முழுவதும் உள்ள மக்களால் பெரிதும் விரும்பிப் போற்றப்படுபவை. ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன் துண்டுகளையும் வைத்து, அவர் நிகழ்த்திய அற்புதத்தைப் பார்ப்போம்.

இயேசு கிறிஸ்து தனது இறைச் செய்தியை இஸ்ரேலின் முக்கிய நகரங்களிலும் - கிராமங்களிலும் தனது சீடர்களுடன் நிகழ்த்திக்கொண்டிருந்த நேரம். அவர் உரை நிகழ்த்தியதுடன் நில்லாது சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள் வாழ்விலெல்லாம் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார். இதில் நோய் வாய்ப்பட்டவர்கள் ஏழைகள், பார்வையற்றோர், காதுகேளாதவர்கள் வாய் பேச முடியாதவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சுகமடைந்தனர்.

அவரது சொற்பொழிவுகள், அது-வரை கேட்டிராத கருத்துக்களாக இருந்ததுடன், மிகுந்த தோழமையுடனும் இருந்ததால், மக்கள் பெருந்திரளாக சென்று அவரது உரையைக் கேட்டனர். அப்படியொரு முறை அங்கிருந்த சிறிய மலையின் மீது நின்று கொண்டு இறை செய்தியை மக்கள் மத்தியில் உரை நிகழ்த்த ஏற்பாடாகி இருந்தது.

அந்த மலையடிவார கிராமத்தின் மக்கள் மட்டும் அல்லாது, சுற்று வட்டார கிராமங்களில் இருந்தும் பலரும் வந்திருந்தனர். மலைக் கிராமத்தில் வசிக்கும் சிறுவன் ஒருவனும், 'கிறிஸ்துவைப் பார்க்க வேண்டும்' என்ற ஆவலுடன், புறப்பட்டான்.

வழியில் பசி எடுத்தால், சாப்பிடுவதற்கு ஏதாகிலும் இருந்தால் நன்றாக இருக்குமே என எண்ணி, தனது அம்மாவிடம், "நான் இன்று நெடுந்தூரம் சென்று, இயேசு கிறிஸ்துவின் உரையைக் கேட்கப்போகிறேன். அதனால், எனக்கு உணவு தயாரித்துக் கொடுங்கள்' எனக் கேட்டான்.

'அடடே, மகனே! உனக்குப் புதிதாக என்னால் திடீரென உணவு தயாரிக்கமுடியாது. ஆனால், நமது காலை உணவாகத் தயாரிக்கப்பட்ட அப்பங்களில் ஐந்தும் இரண்டு மீன் துண்டுகளும் உள்ளன. அதை எடுத்துச்செல் மகனே" எனக்கூறி வழியனுப்பி வைத்தார்.

சிறுவனுக்கோ, 'கிறிஸ்து நாதரைப் பார்க்கப்போகிறோம்' என்று மனம் முழுவதும் மகிழ்ச்சி. உற்சாகத் துள்ளலுடன் கிளம்பிப் போனான். அவன் செல்லும் வழியெங்கும் மக்கள் பெரும் திரளாகச் சென்றார்கள். அவர்களோடு சேர்ந்துகொண்டான்.

மலையின் மீது நின்றுகொண்டு கிறிஸ்து பேசத் தொடங்கினர்.

மக்கள் யாவரும் அவரது பேச்சை ஆழ்ந்த அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தனர். நேரமோ, மதியத்திலிருந்து மாலைப் பொழுதை நெருங்கிக் கொண்டிருந்தது.

அவரது சீடர்களில் ஒருவர் அவரிடம் வந்து, "இவ்விடம் பாலைநிலம் ஆயிற்றே, ஏற்கெனவே நெடுநேரம் ஆகிவிட்டது. மக்களை அனுப்பி வையுங்கள். அப்படி செய்தால்தான் அவர்கள் உணவருந்திச் செல்ல வசதியாக இருக்கும்" என்று இரகசியமாக அவரது காதில் கூறினார்.

அதற்கு அவர், 'அவர்களைப் பசி-யோடு அனுப்புவானேன். நீங்களே அவர்களுக்கு உணவளியுங்கள்" என்றார். இந்த அகால நேரத்தில், எங்கு சென்று இத்தனை பேருக்கும் உணவுப் பொருட்கள் வாங்கி வர முடியுமென யோசித்தனர் சீடர்கள்.

'இயேசு அவர்களின் தயக்கத்தைப் புரிந்துகொண்டு இங்கு வந்திருப்பவர்களில் மதிய உணவாக எவரேனும் உணவு கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று கூட்டத்தைப் பார்த்து வினவினார்.

சிறுவனும் எழுந்து, 'என்னிடம் ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் உள்ளன" என்று கூறி தன் கைகளை உயர்த்தினான். அந்தச் சிறுவனை தன்னிடத்தில் வரவழைத்து, அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் வாங்கி வானத்தை நோக்கிக் காண்பித்து, ஆண்டவரை நோக்கிப் பிரார்த்தித்தார். அப்பங்கள் பல்கிப் பெருகின.

பிரசங்கத்தைக் கேட்க வந்த மக்கள் அனைவரையும் வரிசை வரிசையாக உட்காரச் செய்து அவர்களுக்கு, சீடர்கள் உணவைப் பரிமாறத் தொடங்கினர். எல்லோரும் தேவையான அளவு திருப்தியாக சாப்பிட்டு முடித்தனர். அவர்கள் அனைவரும் தங்களது ஊருக்குக் கிளம்ப ஆயத்தமானார்கள். அவர்கள் சாப்பிட்டது போக, மிகுதியாக 12 கூடைகளில் அப்பமும் மீன் துண்டுகளும் இருந்தன. அதன் பிறகு இயேசுவும் அவரது சீடர்களும் அங்கிருந்து புறப்பட்டுப்போனார்கள்.

# பூசையில் தேங்காயின் மகத்துவம்



வீட்டிலும், கோயிலிலும் தேங்காய் உடைக்கும்போது, அது செம்மையாக உடைபட வேண்டும் என்று பக்தர்கள் ஆர்வத்துடனும் கவனிப்பார்கள். பூஜையின் பயனையும், வாழ்வின் எதிர்கால நிகழ்வுகளையும் உடைந்த தேங்காயின் பகுதிகள் உணர்த்துகின்றன என்று பக்தர்கள் நம்புகின்றனர். உடைத்த தேங்காயில் பூ இருப்பது மிகவும் மங்கலம். நூல் பிடித்தால்போல் சரிபாதியாக உடைவது சிறப்பு. பகுதிகளில் ஏற்ற இறக்கம் இருப்பதால் தவறில்லை. தொட்டில் போல உடைந்தால் மகப்பேறு கிடைக்கும் என்பர். குடுமிப்பகுதி மற்ற பகுதியை விட சற்று பெரிதாக உடைவது நல்லது.

ஓடு சிதறி முழு தேங்காய், கொப்பறை போல் விழுந்தால் அதை சரி பாதியாய் பிளந்து படைக்கலாம். தேங்காய் நீரை பாத்திரத்தில் பிடித்து அதை தீர்த்தமாக பயன்படுத்தலாம். உடைந்த தேங்காய் பாதிகளை மீண்டும் இணைத்து பொருத்தக்கூடாது. தேங்காய் ஒரே அடியில் இருபகுதிகளாக உடைவது மிக நல்லது.

உடைந்த தேங்காய் தேரை மோந்தும், அழுகியும் இருப்பதுகூடாது. சிதறுகாய்போல் உடைய கூடாது. குறுக்கில் உடையாமல் நெடுக்கில் உடைவது சரியல்ல. தேங்காயை உடைக்கும் போது நழுவினால் அபசகுனம். தேங்காயை பிரசாதமாக அனைவருக்கும் தரவேண்டும். அல்லது சைவ உணவு சமைக்க பயன்படுத்தலாம்.

# கண்ணனுக்கு வாழைப்பழத்தோல் கொடுத்த பக்தை



குருவாயூரில் ஒரு கிராமம்! அங்கு ஒரு கணவனும் மனைவியும் வசித்து வந்தனர். இருவரும் ஸ்ரீ கிருஷ்ணரிடம் மிகுந்த பக்தி கொண்டவர்கள்.

எப்பொழுதும் வேலை முடித்ததும் கிருஷ்ணன் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து வருவது வழக்கமாகக் கொண்டிருந்தனர். கிருஷ்ணர் மீது பக்திப் பாடல்கள் பாடி அவனை பூஜிப்பார்கள். ஒருநாள் இரவு கணவன் வெளியே சென்றிருந்த சமயம் அது.

கிருஷ்ணர் குழந்தை வடிவில் அந்த வீட்டிற்குள் நுழைந்தார். மனைவிக்கு அதிர்ச்சி கலந்த ஆச்சரியம்! கண்களில் ஆனந்தக் கண்ணீர்!

உடனே பால கிருஷ்ணனுக்கு ஒரு ஆசனமளித்து அமர வைத்தாள் அவள்! தட்டில் சில பழங்களைக் கொண்டு வந்தாள்! பக்தி மிகுதியால் வாழைப்பழத்தை உரித்து, பழத்தைத் தட்டில் வைத்து விட்டு பழத்தின் தோலைக் கண்ணனுக்கு அளித்தாள்! கண்ணன் அவளது பக்தியில் மனம் கரைந்து இருந்தான். அவனும் தோலை வாங்கி வாய்க்குள் போட்டுச் சுவைத்துக் கொண்டிருந்தான்


சிறிது நேரம் சென்றதும் கணவன் வீட்டிற்குள் நுழைந்தான். இந்தக் காட்சியைக் கண்டதும் அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது! மனைவியைக் கடிந்து கொண்டான். அவளும் சுய நினைவுக்கு வந்தாள்! இருவரும் குழந்தை கண்ணனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.


தங்கள் வீட்டில் சாப்பிட்டுச் செல்ல வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டனர். உணவு தயாரானது. கண்ணனுக்குப் பரிமாறினார்கள். கண்ணனும் சாப்பிட்டான்! கணவன் கண்ணனிடம், கண்ணா சாப்பாடு சுவையாக இருக்கிறதா? என்று கேட்டான். அதற்குக் கண்ணன், உன் மனைவி நான் வந்தவுடன் தந்தாளே வாழைப்பழத்தோல்!.... அதைவிட இந்த விருந்தில் சுவை குறைவாகத்தான் இருந்தது!

**நீதி: இறைவனுக்கு என்ன தருகிறோம் என்பதை விட எப்படித் தருகிறோம் என்பதே முக்கியம்**


# தேசத் தலை











அநுராதபுரம் எல்லாள மன்னனின் சமாதி அருகே தந்தை வேலுப்பிள்ளையின் குடும்பம் வசித்தபோதுதான் பிரபாகரன் கருக்கொண்டார். இதனால் அவரை எல்லாளனின் மறுபிறவி என்றே அவரின் தந்தை வேலுப்பிள்ளை நம்பினார். அவரின் செயல்களும் அவ்வாறே இருந்தன.

வல்வெட்டித்துறையில் வசித்தபோதும், 1954 நவம்பர் 26 ஆம் நாள் யாழ்ப்பாணம் இணுவில் வைத்தியசாலையில் பிறந்தார்.

தந்தை வீராசாமி திருவேங்கடம் வேலுப்பிள்ளை, தாய் வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளை.

மனைவி பிரபாகரன் மதிவதனி, பிள்ளைகள் சார்ள்ஸ் அன்ரனி, துவாரகா, பாலச்சந்திரன்.

ஆரம்பக்கல்வியை மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலயத்தில் கற்றார். பின்னர் வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரியில் 10ஆம் ஆண்டு வரை கற்றார்.

அரிகரன் என்ற பெயரை தந்தை வேலுப்பிள்ளை அவருக்கு சூட்ட இருந்தார். குடும்பத்தவர்களின் விருப்பப்டி பிரபாகரன் என சூட்டப்பட்டது. அவரின் பாட்டி தனது கணவரின் பெயரான துரை என்ற பெயராலேயேஅழைத்து வந்தார்.

கரிகாலன், மணி, மணிவண்ணன், மணியம் என வேறுபெயர்களால் ஆரம்பத்தில் அழைக்கப்பட்டார். குடும்பத்தினரும் வயதில் மூத்தவர்களும் தம்பி என்று அழைத்தனர்.

போராளிகள் 'அண்ணை' (அண்ணா), தலைவர் என்றும் அழைத்தனர். தேசியத் தலைவர் என்ற பெயரை மக்கள் சூட்டினர்.

1968 இல் உருவாக்கிய அமைப்புக்கு 1972 இல் புதிய தமிழ் புலிகள் எனப் பெயரிட்டார்.

புதிய தமிழ் புலிகள் 1976 மே 5 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

படகுகளைச் செலுத்துவதிலும் பிரபாகரன் வல்லவராக இருந்தார். புலிகளால் தயாரிக்கப்பட்ட அதிவேக 'குருவி' படகுகளை பிரபாகரன் செலுத்துவதில் வல்லவராகவும் விருப்புடையவராகவும் இருந்தார்.

பிரபாகரனைக் கொலை செய்ய யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்படிப்பகுதியிலும், பின்னர் மணலாற்றிலும் இந்திய இராணுவம் முயன்றது. அவற்றை முறியடித்து பிரபாகரன் தப்பினார்.

புலிகள் அமைப்பில் கடுமையான ஒழுக்கத்தைப் பின்பற்றுபவராகவும் பின்பற்றச் செய்பவராகவும் இருந்தார். குளோக் 17 ரக பிஸ்டல், எம் 16 ஏ2 குளொட் ரைபிள் என்பவற்றை பயன்படுத்துவதில் விருப்பமுடையவர் மட்டுமல்ல வல்லவரும்கூட.

மதிவதனியை 1984 ஒக்ரோபர் 1ஆம் திகதி சென்னை திருப்போரூர் முருகன் ஆலயத்தில் திருமணம் செய்து கொண்டார்.

பிரபாகரன் - மதிவதனி திருமணம் கே.பி. தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்றவர்களில் கே.பி. மட்டுமே இப்போது உயிருடன் உள்ளார்.

யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பாவை, பொன்னாலையில் வைத்துச் சுட்டுக்கொன்றார். விடுதலைப் போராட்டத்தில் தலைவர் ஏற்படுத்திய முதல் மரணம் இதுவே.

சமைப்பதில் மிகவும் விருப்பமுடையவர். தன்னை சந்திக்கும் போராளிகளுக்கு தனது கரங்களினாலேயே உணவைப் பரிமாறும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

பிரபல நடிகர் ஹரிசன் போர்ட்டின் ரசிகர். இராணுவ, அதிரடி ஹொலிவூட் படங்களை விரும்பிப் பார்ப்பார்.

தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த எம். ஜி. ஆர். மீது பெரும் மதிப்பும், விருப்பும் உடையவர். இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி மீதும் பெரும் மரியாதை கொண்டவர்.

சாண்டில்யனின் கடல்புறா, வேங்கையின் மைந்தன், கல்கியின் பொன்னியின் செல்வன் நாவல்கள் இவருக்கு மிகவும் பிடித்தவை.

கடல்புறா நாவல்மீது கொண்ட விருப்பமே, கடற்புலிகள் பிரிவுக்கு ஆரம்பத்தில் கடல்புறா எனப் பெயர் வைக்கக் காரணமாகிற்று.

' மரணத்தை எண்ணி கலங்கிடும் விஜயா' என்ற கீதா உபதேசப் பாடலை மிகவும் விரும்பிக்கேட்பார்.

தனது மானசீக வழிகாட்டியாக இந்தியாவின் சுதந்திர வீரர் சுபாஸ் சந்திரபோஸைக் கொண்டிருந்தார்.

ஆர். எஸ். நல்லபெருமாள் எழுதிய 'கல்லுக்குள் ஈரம்' நாவலை மீண்டும் மீண்டும் தாம் வாசித்தார் எனக் கூறியுள்ளார்.

ரைம், நியூஸ்வீக் இதழ்களை மொழிபெயர்த்துச் சம கால சர்வதேச அரசியலை அறிந்துகொள்வதில் விருப்பமுடையவர்.

[ 18 ஆம் பக்கம் பார்க்க ]



# லவன் 63



## நாம் அணிவகுத்துள்ளோம்!

நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழீழப் படைவீரர்கள்!
நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த எமது நாட்டை மீட்க

எதிரி எமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்து விட்டான்!
அதைக்கண்டு நாம் அஞ்சவில்லை!

புயலெனச் சீறி
இழந்த நாட்டை மீட்க
நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழீழப் படைவீரர்கள்!

எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்!
ஆனால்...
அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவென்னும்
கவ்சம் எம்மிடம் உண்டு!

எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது!
எமது ஆத்ம பலமோ அதைவிட வலிமை வாய்ந்தது!
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்...
ஆனால்
எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கிவிடும்!

நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழீழப் படைவீரர்கள்!
எமது அணிவகுப்பு
எமது தமிழீழ மக்களிடையே
அணிவகுத்துச் செல்கிறது!

நாம் செல்லும் இடமெல்லாம்...
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்!
மக்களிடம் உள்ள
பிரதேசம் சாதி
மதமென்னும் பேய்களும்
அலறி ஓடுகின்றன...

எமது படையணி விரைகிறது...
எமது தேசத்தை மீட்க!

நாம் செல்லும் இடமெல்லாம்
காடுகள் கழனிகள் ஆகின்றன!
வெட்டிப் பேச்சு வீரர்கள்
மிரண்டோடுகின்றனர்...!

உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது.
ஏழைகள் முகங்களில்
புன்னகை உதயமாகிறது.

இக்கவிதை 1981 இல்
தலைவர் பிரபாகரனால் எழுதப்பட்டது.













# நம்பிக்கை இன்னும் சாகவில்லை

சிறுகதை

■ தமிழ்ப்பொடியன்

வழமைக்கு மாறாக அன்று வானம் கறுத்துக் கிடந்தது. தூரத்தில் கார்முகில்கள் திரண்டு மழைக்குணமாய் இருந்தது.

கார்த்திகை 27. இது கல்லறைகள் பூப்பூக்கும் மாதம். அதனால்தான் என்னவோ வானம் இப்பிடி கிடக்குது.

சந்திரன் போன கிழமைதான் தடுப்பில இருந்து வெளியில வந்திருந்தான். கிட்டத்தட்ட இரண்டு வருசம் இருண்ட உலகத்தில் அவனது வாழ்க்கை கரைந்துபோனது. சந்திரன் கடைசி நிமிசம் வரை வெளியில வருவான் எண்டு நம்ப இல்லை. எல்லாம் கெட்ட கனவு போல நடந்து முடிந்து விட்டது.

"என்னப்பா யோசிச்சு கொண்டு இருக்கிறியள்?அதுதான் எல்லாம் முடிஞ்சு போச்சுதே.. இனிமேல் எண்டாலும் உங்கட எதிர்காலத்தை நினைச்சு நடவுங்கோ.. "சந்திரனின் மனைவி இதை சொல்லும் போது அவளது கண்களில் ஏதோ வெறுமை தெரிந்தது.

"இல்லடி, இண்டைக்கு ஏதோ மனம் ஒருமாதிரி இருக்கு. மனசு வலிக்குது. நான் ஒருக்கா கடற்கரைப்பக்கம் போட்டு வாறன்." என்று சொன்ன சந்திரன் மனிசியின் பதிலுக்கு காத்திராமல்

"டேய் சிலம்பரசன், அப்பான்ர சேட்டை ஒருக்கா எடுத்து வா" என்றான்.

சிலம்பரசன்... அவன் சந்திரனின் ஒரே மகன். ஆனையிறவு சண்டை நடக்கும் போது பிறந்தவன். அவன் பிறந்து ஒரு மாதத்துக்கு பிறகுதான் சந்திரன் விடுமுறையில வந்து பார்த்தான். சந்திரன் தான் அவனுக்கு சிலம்பரசன் எண்டு பெயர் வைத்தான்.

சிலம்பரசனும், சந்திரனும் ஒண்டா படிச்சு பிறகு ஒண்டா இயக்கத்தில சேர்ந்தவங்கள். சிலம்பரசன் வீரச்சாவு அடைஞ்ச போது மட்டும் தான் சந்திரன் கண் கலங்கி அழுதிருக்கிறான்.

கிட்டத்தட்ட 15 வருசம் சந்திரனின் வாழ்க்கை போராட்டத்தோடு மட்டுமே கரைந்துபோனது. அவனின் உடம்பில் காயம் இல்லாத இடமே இல்லை. முல்லைத்தீவு சண்டையில கடும் காயம் அடைந்து சந்திரன் செத்துப் பிழைத்திருந்தான். இப்பவும் அவன்ர இடது காலில ஷெல் துண்டு கிடக்குது.

வெளியில போக வெளிக்கிட்ட சந்திரன் படலை திறக்கும் சத்தம் கேட்டு திரும்பி பார்த்தான். மாஸ்ரர் படலை திறந்து உள்ளே வந்தார்.

சிவா மாஸ்ரரும் சந்திரனைப்போலத்தான் ஆனால் அவர் தடுப்பில இருக்க இல்லை.

ஊடகப்பிரிவில இருந்த படியால் அவரை தனியா கொண்டு போட்டாங்கள். பிறகு அவர் இப்ப அவங்கட கட்டுப்பாட்டில தான் ஏதோ வேலை செய்யுறார் எண்டு கேள்வி.

"வாங்கோ மாஸ்ரர் உங்களை வந்து பாக்க வேணும் எண்டு நினைச்சன். நீங்களே வந்திட்டியள்" என்றான் சந்திரன்.

"இல்லடா தம்பி நீ வெளியில வந்திட்டாய் எண்டு கேள்விப்பட்டன். சந்தோசம்டா. எப்பிடி இருக்கிறாய்" மாஸ்ரர் கேட்டபடியே முற்றத்து மண்ணில் சப்பாணி கட்டி இருந்தார். சந்திரனும் அவரின் பக்கத்தில் இருந்தான்.

"பிள்ளை தேத்தண்ணி ஒண்டும் போடாத. நான் இண்டைக்கு ஒண்டும் சாப்பிட மாட்டன்." என்றார் மாஸ்ரர்.

மாஸ்ரருக்கு மூண்டு ஆம்பிளைப்பிள்ளைகள். அதில மூத்தவன் ஆனையிறவு சண்டையில வீரச்சாவு. இரண்டாவது மகன் முள்ளிவாய்க்கால் வரை உயிரோடதான் இருந்தவன். அதுக்கு பிறகு எந்த தொடர்பும் இல்லை. கடைசி மகனுக்கு ஒரு கால் இல்லை. முப்பது வருசமா போராட்டத்தோடுதான் இவரின் வாழ்க்கையும் ஓயாமல் உருண்டோடியது.

"என்ன மாஸ்ரர் இப்ப எப்பிடி போகுது? உவங்களோட வேலை செய்யுறதிலும் பாக்க பேசாமல் வெளிநாடு எங்கேயும் போக வேண்டியது தானே" என்றான் சந்திரன்.

"தம்பி நான் குப்பி கடிச்சிருப்பன். என்ர கடைசி மகனுக்காகவும் மனிசிக்காகவும் தான்ர இப்பவும் உயிரோட இருக்கிறன். செத்தாலும் வாழ்ந்தாலும் இந்த மண்ணில தாண்டா. "மாஸ்ரரின் குரலில் தெளிவும் உறுதியும் தெரிந்தது.

"எத்தின பேரை இந்த கையால விதைச்சிருப்பன். துண்டுதுண்டாய் இரத்தத்தில மிதந்து வந்த எங்கட சனத்தை கூட்டி அள்ளி தாட்டிருப்பன். அப்ப எல்லாம் மனசு வலிக்க இல்லையடா தம்பி. ஆனால் எங்கட ஆக்களிண்ட பேச்சை கேக்கும் போது தாண்டா செத்துப்போகலாம் எண்டு இருக்கு." மாஸ்ரர் கண் கலங்கி சொன்னார்.

"ஏன் மாஸ்ரர் என்ன பிரச்சினை?"

"ஒவ்வொரு நிமிசமும் எங்கட நினைப்பும் செயலும் இந்த போராட்டதோடு தான்ரா போனது. எங்களுக்கு எங்கட குடும்பத்துக்கு எண்டு எதுவுமே சேர்த்து வைக்கவும் இல்லை. அப்பிடி உயிரையே குடுத்து இந்த மண்ணில கடைசி வரையும் நிண்டம். அது பிழையோடா தம்பி. எங்களையெல்லாம் துரோகிகள் எண்டு பேசுறாங்கள். எழுதுறாங்கள். இதை இந்த மண்ணில கடைசிவரையும் நிண்டவன் சொல்லட்டும். போனவன் வந்தவன் எல்லாம் கண்டபடி பேசு றாங்கள்.. அதுதாண்டா கவலையா இருக்கு."

மாஸ்ரர் இதை சொல்லும் போது அவரது குரலில் வெறுப்பும் கோபமும் தெரிந்தது.

"விடுங்கோ மாஸ்ரர். இத்தனை விலை குடுத்தும் இவ்வளவு தியாகம் செய்தும் இன்னும் எங்கட ஆக்கள் திருந்த இல்லையெண்டா இனி திருந்தவே மாட்டாங்கள்" என்றான் சந்திரன்.

"நாப்பது ஆயிரம் எங்கட பிள்ளைகளிண்ட ஆன்மாக்கள் ஒண்டா நிண்டு கண்கலங்கிற இந்த நாளில அந்த பிள்ளைகளின்ர தியாகங்களையும் இலட்சியங்களையும் இரண்டா மூண்டா கூறு போட்டு பாக்குதுகள் சிலதுகள். நினைக்கும் போது கோபத்தில நெஞ்சு எரியுதடா தம்பி". மாஸ்ரர் சொல்லுவதிலும் உண்மை இருக்கிறது.

"ம்ம்ம்ம்ம்ம்ம்... எல்லா நம்பிக்கையும் போட்டுது மாஸ்ரர்" என்றான் சந்திரன்.

"ஆறு மணியாகுது விளக்கு ஏத்துறன். வீட்டுக்குள்ள வாங்கோ" சந்திரனின் மனைவி இருவரையும் கூப்பிட்டாள்.

சாமித்தட்டில் விளக்கு ஏத்திப்போட்டு கண்ணை மூடி எல்லோரும் இரண்டு நிமிசம் அமைதியாய் இருந்தார்கள்.

கண்ணை திறந்து பார்க்கும் போது சாமித்தட்டில் விளக்குக்கு பக்கத்தில் மெழுகுதிரி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அதற்கு அடியில் கார்த்திகை பூ ஒண்டு இருந்தது.

எல்லோரும் ஒன்றும் புரியாமால் முகத்தை முகத்தை பார்த்தார்கள்.

மெழுகுவர்த்தியின் சுடர் காற்றுக்கு அணைவது போல இருந்தது.

சந்திரனின் சின்னப்பொடியன் சிலம்பரசன் ஓடிப்போய் இரண்டு கைகளாலும் அணையவிடாமல் வைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்து சிரித்தான்.

"தம்பி என்ர நம்பிக்கை இன்னும் சாக இல்லையடா.."

மாஸ்ரர் சொல்லி முடிக்கும் போது வெளியில் மழை கொட்டத் தொடங்கியது.

குறிப்பு: (கனவுகளில் வாழ்பவர் களுக்கு இது கற்பனைக் கதை. யதார்த் தங்களை உள்ளார்த்தமாய் உணர்ந்தவர்களுக்கு இது நிஜம்). ■

## மாவீரர் நாள் : எழுச்சிப் பாடல்களின் வரவு

1980களின் தொடக்க பகுதியில் காசி ஆனந்தன் அவர்களின் பாடல்களை தேனிசை செல்லப்பா பாடி முதல் ஒலிப்பேழை வெளிவந்தது.

1985 காலப்பகுதியில் தமிழ்நாட்டில் அருச்சுனா - இவர் பின்பு கடலில் வீரச்சாவடைந்தார். இசைப்பாடலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அவரது வீரச்சாவால் அது தடைப்பட்டது. திலீபனின் உண்ணாநோன்பின் போது வசதிகள் ஏதுமற்ற நிலையில் காசி ஆனந்தன் அவர்களின் இரு பாடல்களும், ஒரு பாடல் திலீபன் அழைப்பது சாவையா... புதுவை அண்ணரின் இரு பாடல்களும் ஒரு பாடல் வாசமலர் ஒன்று வாடிக்கிடக்கின்றது. யாழில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

1990 இல் யாழ்ப்பாணத்தில் "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்ற ஒலிப்பேழை வெளியீட்டுடன் பல ஒலிப்பேழைகள் வெளிவரத் தொடங்கின "வேங்கைகளின் விடுதலை வேதங்கள்" என்ற ஒலிப்பேழைக்காக புதுவை அண்ணரால் எழுதப்பட்ட பாடலை தலைவர் மாவீரர் நாளுக்குரிய பாடலாக்க வேண்டுமென விரும்பியதையடுத்து அந்தப் பாட்டில் சில வரிகள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டு மாவீரர் துயிலுமில்லத்தில் பாடுவதற்கான பாடலாக வெளிவந்தது. கண்ணனின் இசையில் வர்ண இராமேஸ்வரனுடன் பலர் அதை பாடினர். அதில் "முதல் நள்ளிரா வேளை யில் நெய் விளக்கேற்றியே..." என்றிருந்த வரி பின்பு மாவீரர் நினைவொலி நேரம் மாற்றப்பட்டபோது "வல்லமை தந்துமே" என மாற்றப்பட்டது. இந்த மாற்றப்பட்ட வடிவமே இன்று நாம் கேட்கும் பாடலாகும்.

மாவீரர்களைப் விதைக்கத் தொடங்கிய பின்னே மாவீரர் மயானம், மாவீரர் துயிலுமில்லமென அழைக்கப்பட்டது.

1990இல் மாவீரர் நாளுக்காக தலைவர் முதன்முதலில் உரை நிகழ்த்தினார். அன்றிலிருந்து அவரது மாவீரர் நாள் உரை தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்கால நடவடிக்கைகளை அவர்களது எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒரு கொள்கை உரையாக எல்லோராலும் பார்க்கப்பட்டது.



# அசர வைக்கும் டென்னிஸ் ஆட்டம்

ஆளுக்கொரு ராக்கட். ஒரு பந்து. இரு வீளையாட்டு வீரர்களையும் பிரிக்க ஒரு வலை. டென்னிஸ் விளையாட இவை போதும். கிரிக்கெட் விளையாட்டுக்கு எந்த விதத்திலும் சளைக்காமல் ஈடு கொடுக்கக்கூடிய விளையாட்டு டென்னிஸ் விளையாட்டு! அதே சமயம் ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டங்கள் போல வேகத்திற்கும் விறுவிறுப்பிற்கும் இந்த விளையாட்டில் பஞ்சமே இருப்பதில்லை. கைகளுக்கும் கால்களுக்கும் என்று மட்டுமில்லாமல், முழு உடம்பிற்குமே நிறைய வேலை கொடுக்கும் விளையாட்டு இது. மின்னல் வேகத்தில் அடிக்கப்படும் பந்தை இலாவகமாக எதிர்கொண்டு தன் கையிலுள்ள ராக்கெட்டால் அடிப்பதும், அடித்த கையோடு படுவேகமாகத் திருப்பப்படும் பந்தை எதிர்கொள்வதும், சவாலான விடயம். ராக்கெட் இல்லாத டென்னிஸ் ஆட்டம். எதற்கும் ஒரு மூலம் உண்டல்லவா ? இந்த விளையாட்டு எப்படி, எங்கு ஆரம்பித்தது என்பதற்கும் ஒரு சரித்திரம் இருக்க வேண்டுமல்லவா? பிரான்ஸ் நாட்டு கிறிஸ்தவ துறவிகளின் மடத்திலேயே , இந்த விளையாட்டு ஆரம்பமாகி இருப்பதாக அனேகமான சரித்திர சான்றுகள் பகர்கின்றன. 12ம் நூற்றாண்டில் இந்தத் துறவிகள் இதை விளையாடியது உண்மைதான். ஆனால் அவர்கள் ராக்கெட் என்று சொல்லப்படும் மட்டை கொண்டு பந்தை அடிக்கவில்லை. தமது உள்ளங்கைகளைக் கொண்டே பந்தை அடித்துள்ளார்கள்.


16ம் நூற்றாண்டில்தான், ராக்கெட்டுகள் இந்த விளையாட்டுக்கவில் அறிமுகமாகியதோடு, டென்னிஸ் என்ற பெயரும் ஒட்டிக் கொண்டது.

ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்திலும் , பிரான்ஸிலும் இந்த விளையாட்டு , வெகு வேகமாக பிரபல்யம் அடையத் தொடங்கியது. அன்றைய காலகட்டத்தில் இங்கிலாந்தின் மன்னனாக இருந்த எட்டாவது ஹென்றி டென்னிஸ் விளையாட்டின் பெரிய விசிறியாக இருந்துள்ளார்.

டேவிஸ் கிண்ணத்துக்கான போட்டிகள், விம்பிள்டன் கிண்ணப் போட்டிகள், கிராண்ட் ஸ்லாம் போட்டிகள் என்று பல தொடர் மோதல்கள் டென்னிஸ் போட்டிகளை அலங்கரிக்கின்றன. இதில் 1877ஆம் ஆண்டு ஆரம்பித்த விம்பிள்டன் கிண்ணத்துக்கான போட்டிகளே தொன்மையானது.

விம்பிள்டன் டென்னிஸ், ஆல் இங்கிலாந்து கழகம்( All England Club) 1877இல் "சம்பியன்ஷிப்" என்ற பெயரில் ஒரு டென்னிஸ் மோதலை ஆரம்பித்து வைத்தது.

இது இங்கிலாந்தின் விம்பிள்டன் என்னும் இடத்திலேயே இடம்பெற்றுள்ளது. இதில் ஆண்கள் மாத்திரமே கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். இந்தச் சுற்றுப் போட்டியில் 22 ஆண்கள் கலந்து கொண்டார்கள். இந்தப் போட்டிகளின் போது, எப்படியான விதிகளை அமுல்படுத்துவது என்ற விடயத்தில் திணறி இருக்கிறார்கள். தொடர்ந்த அடுத்த வருடத்தில் அலுவலக பிரிட்டிஷ் சம்பியன்ஷிப் என்ற பெயரில், இந்தப் போட்டிகள் இடம் பெற்றுள்ளன. பெயர் "பிரிட்டிஷ்" என்றிருந்தாலும், இந்தப் போட்டிகளில் உலக நாட்டு விளையாட்டு வீரர்கள், விளையாட அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.



1884இல் மகளிர் ஒற்றையர் ஆட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதே ஆண்டில் கனவான்களில் இரட்டையர் ஆட்டம் கொண்டுவரப்பட்டது. 1913இல் மகளிருக்கான இரட்டையர் ஆட்டமும், ஆணும் பெண்ணும் கலந்து ஆடும் ஆட்டமும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன.

1937இல்தான், தொலைக்காட்சி, விம்பிள்டன் போட்டிகளை ஒளிபரப்ப ஆரம்பித்துள்ளது.

1994இல் ஆரம்பித்த, கட்டுமானப் பணிகள், விம்பிள்டன் அரங்கத்தை நவீனப்படுத்தும் முகமாக, கட்டங்கட்டமாக செயற்படுத்தப்பட்டன. புதிய மிலேனியக் கட்டடம் என்று அழைக்கப்பட்ட விளையாட்டு அரங்கு, மேலதிக 728 பார்வையாளர்களுக்கு இருக்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. கார்களின் மேற் கூரை திறந்து மூட வசதி கொண்டிருப்பதைப்போல, சென்டர் கோர்ட் என்று அறியப்படும், மத்திய விளையாட்டு அரங்கிற்கும் கூரை நிர்மாணிக்கப்பட்டு, 2009இல் திறப்பு விழாவாக,மே 17அன்று அப்போதைய பிரபல்யங்களான அன்ட்ரே அகாசி, ஸ்ரெபி கிராபி, ரிம் கிளிஸ்டேர்ஸ், ரிம் ஹென்மான் ஆகியோர் இந்தத் திடலில் விளையாடி இருக்கிறார்கள். திடல் இலக்கம் ஒன்று என்று அழைக்கப்படும் அரங்கில், 11,360 பார்வையாளர்கள், ஒரே நேரத்தில் உட்கார்ந்து விளையாட்டைப் பார்க்க முடியும். இது புற்றரைகள் கொண்ட ஒரு விளையாட்டு திடலாகும். மத்திய திடல் 14,360 பார்வையாளர்களை உள்ளடக்கக் கூடியது. 100 மில்லியன் பவுண்டஸ் தொகை செலவிட்டு, 2009இல் இது புதுப்பிக்கப்பட்டது. திடல்3 அளவில் சிறியது. 2000 பார்வையாளர்களை உள்ளடக்கக் கூடியது.

மிகத் தொன்மையான இந்த விம்பிள்டன் போட்டிகளில் விளையடுபவர்கள் குபேரர்களாகி விடுவதில் சிரமம் இருக்காது.

2017இன் ஒற்றையர் ஆட்ட சம்பியனுக்கு கிடைக்கும் பரிசுப் பணம் 2.2 மில்லியன் பவுண்ட்ஸ் நம் நாட்டு மதிப்பில் 45 கோடி ரூபா 2016ஐ விட, இத் தொகை 200,000 பவுண்ட்ஸால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2011இலிருந்து இன்று வரையிலான காலகட்டத்தில் இவர்கள் பரிசுத் தொகை இரட்டிப்பாகி இருக்கிறது...



(சுவாரசியம் தொடரும்)

## சினிமா துளிகள்




தீபிகா படுகோனின் 'பத்மாவதி" திரைப்படத்துக்கு பெரும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. அவரைக் கொல்வதற்கு 5 கோடி ரூபா வரை பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் டிசம்பர் முதலாம் திகதி வெளியாகவிருந்த திரைப்படம் திகதி அறிவிக்கப்படாமலே பிற்போடப்பட்டுள்ளது.



நடிகர் அஜித்தை வைத்து இயக்குநர் சிவா இயக்கும் அடுத்த படத்துக்கு 'விசுவாசம்' எனப் பெயரிடப் பட்டுள்ளது. படத்தைத் தயாரிக்கும் சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஜனவரி மாதம் 'விசுவாசம்' படத்தின் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது. 2018 தீபாவளி வெளியீடாக 'விசுவாசம்' வெளிவரும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



திரைப்பட இணை தயாரிப்பாளராகவும், கம்பெனி புரொடக்ஷன்ஸ் தயாரிப்பு நிறுவனத்தின் அலுவலக நிர்வாகியாகவும் பணிபுரிந்து வந்த அசோக் குமார் செவ்வாய்க்கிழமை தற்கொலை செய்து கொண்டார். கடன் கொடுத்த பிரபலம் ஒருவர் மிரட்டியதாலேயே தற்கொலை செய்து கொள்வதாக அவர் கடிதம் எழுதி வைத்திருந்தார். அசோக்குமார் தற்கொலை திரைத்துறையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.



யுனிசெவ், நடிகை த்ரிஷாவை தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் குழந்தைகளுக்கான நல்லெண்ணத் தூதுவராக நியமித்துள்ளது. தமிழ் சினிமாவில் 10 வருடங்களுக்கும் மேலாகக் கோலோச்சுபவர் த்ரிஷா. தற்போது 96, சதுரங்க வேட்டை 2 படங்களில் நடித்து வருகிறார். தென்னிந்தியாவை சேர்ந்த நடிகை ஒருவர் யுனிசெவ்வின் நல்லெண்ணத் தூதுவராக நியமிக்கப்பட்டமை இதுவே முதல்தடவை.



இதற்கு தானே ஆசைபட்டாய் பாலகுமாரா, காஷ்மோரா படங்களை இயக்கிய கோகுல் தற்போது விஜய் சேதுபதியை வைத்து ஜிங்கா படத்தை இயக்கி வருகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு பரிஸில் தொடங்கி நடைபெற்று வந்தது.

விஜய் சேதுபதி ஜோடியாக வனமகன் படத்தில் நடித்த சாயிஷா சைகல் நடித்து வருகிறார். இந்நிலையில் படத்தில் இன்னொரு கதாநாயகியாக சோலோ படத்தில் நடித்த நேகா சர்மா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.


இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை படக்குழுவினர் விரைவில் வெளியிட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அதிக பொருட் செலவில் உருவாகி வரும் இப்படத்தை விஜய்சேதுபதி தயாரிக்கிறார்.



இக்கவிதை விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டு கழகப் பொறுப்பாளரும் கவிஞருமான புதுவை இரத்தினதுரை அவர்களால் வியாசன் என்ற புனை பெயரில் 2007 மாவீரர் நாளுக்காக எழுதப்பட்டது.


# காலம் எழுதிகளின் நினைவுக்கு என்ன கைமாறு செய்வோம்?

கார்த்திகை 27 - மாவீரர் நாள்
பிள்ளைகள் துயிலும் கல்லறைகளுக்கு
நெய் விளக்கேற்றும் திருநாள்.
உள்ளே உடல் வியர்த்துக் கிடப்பவரை
மனதால் வெளியே தூக்கி
மெய் கழுவி
வாசம் பூசி
முத்தம் பொழிந்து
மீண்டும் குழி வைப்பதான பாவனையில்
சுற்றும் சூழும் பெருநாள்.
தெய்வங்களுக்குப் படைப்பதில்லையே தவிர
வரம் கேட்டு வணங்கும் நாள்.
நீண்ட விதை வயலின் வரிசையில்
கூடி நிற்கும் சுற்றத்துக்கு
அவர்கள் குரல் கேட்கும் தினம்.
பத்து மாதம் சுமந்து
பகலிரவாய் கண் விழித்து
அமுத முலைகொடுத்து
தூக்கிச் சுமந்தவர் முன்னே
அவர்கள் விழி திறக்கும் நாள்.
பெற்றவளின் முன்னே பெரிதாய் நெடிதுயர்ந்து
அம்மா என அழைப்பார்கள்.
அந்த ஒற்றைச் சொல் போதுமே
சுமந்தவள் மெழுகாய் உருக.
விதைத்த வயல்கள் பரந்து கிடக்கின்றன
தாயகத்தின் திசையெங்கும்.
துயிலுமில்ல வாசல் கடக்கும் ஒவ்வொரு தடவையும்
தண்டனையற்ற குற்றவாளிகள் போலத்தான்
நடந்து போகிறோம்.
'உங்களை நம்பியே உள்ளே கிடக்கிறோம்
எங்கள் நெருப்பில் குளிர் காயாதீர்"
காற்றில் வருகிறது கல்லறைக் குரல்.
துயிலுமில்லம் நுழையும்போதில்
நீதிமன்றில் நிற்பதுபோலத் துடிக்கிறது மனம்.
விட்டபணி தொடராத குற்றவுணர்வில்
வேர் காய்ந்து விடுகிறது உள்ளே.
மாவீரர்கள்
அவர்களை எங்கிருந்து எழுதத் தொடங்குவது?
எழுதத் தொடங்கினாலும்
பேனா உருகிக் கரைந்து விடுகிறதே.
ஈழத் தமிழர் நிமிர்வுக்கு
அவர்கள்தானே வீரியம் தந்தனர்.
மிதித்தேறிப் போகலாமென்றிருந்த இனத்துக்கு
முகமும் முகவரியும் தந்தனர்.
பிள்ளைப் பூச்சிகளாக
எடுப்பார் கைப் பிள்ளைககளாக
அழைத்தவர் பின்னே ஓடிய இனத்துக்கு
நிமிர்வும் திமிர்வும் தந்தனர்.
காலம் எழுதிகளின் நினைவுக்கு
என்ன கைமாறு செய்தோம் நாம்?
ஒருநாள் கூடி
பூ வைத்து
நெய்விட்டு விளக்கேற்றி
அந்தப் பாடலையும் பாடி
நெக்குருதல் மட்டும் போதுமானதா?
சின்னப் பருவத்தின் கனவைத் துறந்து
இளமைக் காலத்தின் சிறகை அரிந்து
தங்களை ஒறுத்துப்போன தேவைகளுக்கு
என்ன நிவேதனம் படைத்தோம் நாம்?
அவர்கள் கனவு மெய்ப்படதவரை
எந்தக் கிரிகையாலும் அவர்கள் ஆறமாட்டார்கள்.
விடுதலை அவர்களின் மூச்சாயிருந்தது
போராட்டம் அவர்களின் மூச்சாயிருந்தது
வெறும் பேச்சிற் கழியவில்லை அவர் பொழுது.
உலகம் ஓடி வரும்
ஐ.நா. சபை தேடி வரும்
அகாசி வருவார்
ஜோர்ஜ் புஸ் தருவாரென
நம்பியிருக்கவில்லை அவர்கள்.
களத்தில் நின்றனர்
களத்தில் உண்டனர்
களத்தில் உறங்கினர்
களத்தில் உயிரையும் விட்டனர்
அவர்களுக்கு எந்த மயக்கமும் இருக்கவில்லை
முடிதரித்த தலையராய் உலவினர்
உயிர்கொடுத்த அழகராய் உறங்கினர்.
எந்தச் சுமையுமற்ற மனிதராய்
தலைவனை மட்டும் நம்பினர்.
தலைவன் இடிபமாட்டான் எனும் நம்பிக்கையில்
உறுதியுடன் நின்றனர் இறுதிவரையும்.



கார்த்திகைப் பூக்களின் திருநாள் வருகிறது
பிள்ளைகளிடம் போகும் பொழுதில்
என்ன எடுத்துச் செல்வோம் இம்முறை?
பாடலுடன் அவர்கள் கண் திறக்கும்போது
கொடுக்க என்ன இருக்கிறது எம்மிடம்?
வெற்றி மட்டும்தான் வேண்டியதில்லை
பின்னடைவையும் அவர்கள் புரிந்துகொள்வார்கள்.
எங்கள் கைகளில் இருக்கிறது அனுராதபுரம்
கொடுக்க மகிழ்ச்சியுடன் எடுப்பார்கள்.
எனினும் எம்மில் நெருப்பெரிய வேண்டும்
மயக்கமில்லாத மனமும்
வழிதவறாத நிலையும் வேண்டும்.
விடுதலையில் வழுவாத வீரியமும் வேண்டும்.
தன்னையே கொடுக்கும் சக்தியும் வேண்டும்.
தமிழீழம் என்ற உறுதியும் வேண்டும்.
இவற்றைச் சுமந்தால் ஏற்பார்கள்
இல்லையேல் உள்ளே சிரிப்பார்கள்.
சுவாசிக்கும்போது உள்ளிழுப்பது
சுதந்திரத்தின் கனவுகளாக இருக்க வேண்டும்.
மாவீரர் நாள்
மயக்கமில்லாதவரின் மானப் பெருவிழா
எத்தனை துயர் வரினும் இடிய மாட்டோமென
கல்லறைகளிற் சத்தியம் செய்யும் நாள்.
நேற்றுவரை நீங்கள் நேரிருந்தீர்.
கண்களிலே
பூத்ததுபோற் பூத்துப் புன்னகைத்தீர்
எங்களுடன்
பேசிக்களித்தீர் - போய்விட்டர்
தாயகத்தில்
வீசி வரும் காற்றில் விரித்த சிறகெடுத்துத்
தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே!
ஈர விழியிங்கு எமக்கின்னும் காயவில்லை
செங்குருதி பாய்ந்து திசை சிவந்து
எதிரிகளின்
தங்கங்கள் யாவும் தணலிற் கருகியபின்
வென்ற களிப்பில் வீடு வந்தோம்
அன்றிருந்து
இன்றுவரை உம்மை எவ்விடத்தும் காணலையே.
கல்லறைக்குள் நீங்கள் கண்மூடித் தூங்குவதாய்
சொல்லுகிறார்
உங்கள் தேகம் தூங்காதே.
மொட்டவிழும் பூவினிலே முகம் தெரியும்
வீசுகின்ற
**காற்றினிலும் மூச்சுக் கலந்து**
**எம்மை உயிர்ப்பிக்கும்.**

# சாள்ஸ் மன்ஸன்



சாள்ஸ் மன்ஸன். 1960-களில் அமெரிக்காவை அலறவைத்த ஒரு பெயர். 'மன்ஸன் பமிலி' அதாவது மன்ஸன் குடும்பம் எனும் பெயரில் அறியப்பட்ட அவரது குழுவினர் நடத்திய படுகொலைகள் குலைநடுங்க வைப்பவை. முன் அறியப்பட்ட கொடூரக் குற்றவாளிகள் போலவே அவரது வாழ்க்கையின் 'தொடக்கமும் சிக்கல்கள் நிறைந்ததாகவே காணப்பட்டது. மன்ஸன் தாய் திருமணமாகாதவர். திருமணமாகாத பெண்ணுக்குப் பிறந்தவன் என்ற வகையில் தந்தையின் கட்டுப்பாடுகள் அவனுக்கிருந்ததில்லை. கட்டுப்பாடற்றவனாக வளர்ந்ததில் அவன் சிறுவயதில் சின்னச் சின்னக் குற்றங்களைச் செய்து சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளில் அடைக்கப்பட்டான். குற்றவுணர்வற்ற குற்றவாளியா-கவே தன் போக்கிலேயே அவன் வளர்ந்தான். மேற்கத்தைய இசை அவனுக்குப் பிடித்த தொன்று. 'பீட்டில்ஸ்' இசைக் குழுவின் ரசிகன். ஆதலால் சிறையில் இருந்தபோது கொஞ்சம் கிற்றார் இசைக்கக் கற்றுக்கொண்டான். ஒருகட்டத்தில் தான் இயேசுவின் அவதாரம் என்று தன்னை முன்னிறுத்திக் கொண்ட மன்ஸனால் அமெரிக்காவின் உயர் நடுத்தர வர்க்கப் பெண்கள் கவரப்பட்டனர். அவன் என்ன சொன்னாலும் கேட்கும் அளவுக்கு மன்ஸன் அவர்களை ஈர்த்துக் கொண்டான். போதை மருந்து, கட்டற்ற பாலியல் உறவு என்று ஒரு சாம்ராஜ்யத்தை அமைத்துக்கொண்ட மன்ஸனும் அவனது குழுவினரும் "ஹிப்பி" கலாச்சாரத்தில் திளைத்தனர். விஷயம் அத்துடன் நிற்கவில்லை. வெள்ளை இனத்தவர்களுக்கும் கறுப்பினத்தவர்களுக்கும் இடையில் ஒரு இனப் போர் உருவாகும் என்று கற்பிதம் செய்துகொண்டான் மன்ஸன். 'பீட்டில்ஸின் 'ஹெல்ட்டர் ஸ்கெல்ட்டர்' பாடலின் மூலம் அவன் உருவாக்கிக்கொண்ட கருத்தாக்கம் அது. வெள்ளை இனத்தவர்களைக் கொலை செய்து பழியைக் கறுப்பின மக்கள் மீது போட முடிவெடுத்தான். அதையே தன் குழுவினருக்கும் மூளைச்சலவையாகச் செய்துகொண்டான்.

1969 ஆகஸ்ட் 9. இரவு நேரம். புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் ரோமன் போலன்ஸ்கியின் மனைவியும் நடிகையுமான ஷேரோன் ரேற் உள்ளிட்ட ஐந்து பேர், கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் உள்ள போலன்ஸ்கி வீட்டில் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். கொலையுண்ட வீட்டின் சுவரில் 'பன்றி' என்று எழுதப்பட்டிருந்தது. இதைச் செய்தது யார் என்று போலீஸ/க்குப் புரியவில்லை. பொலிஸ் விசாரணை முடுக்கிவிடப்பட்டது. இதற்கிடையில் வேறொரு வழக்கில் மன்ஸன் உள்ளிட்ட பலர்கைதாகியிருந்தனர். தொடர்ச்சியான விசாரணைக்குப் பின்னர் மன்ஸன் குழுவைச் சேர்ந்த மூன்று பெண்கள்தான் அந்தக் கொலையைச் செய்தவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டனர். மன்ஸனின் உத்தரவுப்படி மேன்சனின் குழுவைச் சேர்ந்த டெக்ஸ் வாட்சன் என்பவன் சூசன் அட்கின்ஸ், லின்டா கசாபியான், பெட்ரிஷியா க்ரென்விங்கெல் ஆகிய பெண்களை அழைத்துச் சென்றான். டெக்ஸ் வாட்சனின் 'மேற்பார்வையிலேயே அந்தக் கொலைகள் அரங்கேறின. ஆனால், அந்தக் கொலைகளில் திருப்தியடையாத மேன்சன், 'எப்படிக் கொலை செய்வது?' என்று காட்டுவதற்காக, அடுத்த நாள் இரவு தானே ஆறு பேரை அழைத்துச் சென்று தன் விருப்பப்படி வேறு இருவரைக் கொலைசெய்ய வைத்தான்.

இப்படியே இந்தக் கும்பல் மொத்தம் ஒன்பது பேரைக் கொடூரமாகக் கொன்றது. மன்ஸன் சிறையில் இருந்தாலும், அவரது குழுவைச் சேர்ந்தவர்கள் குறிப்பாகப் பெண்கள் கொலை வெறியுடன்தான் அலைந்தார்கள். 1975-ல் அப்போதைய அதிபர் ஜெரால்ட் போர்ட்டைச் சுட்டுக்கொல்ல லினெட் ஸ்க்யூக்கி ஃப்ரோம் என்ற பெயருடைய மன்ஸனின் சிஷ்யை முயற்சிசெய்தது அமெரிக்காவில் பரபரப்பான செய்தியானது.

மன்ஸனுக்கு முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தாலும் பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. இந்நிலையில், தனது 83-வது வயதில் கடந்த நவம்பர் 19-ல் கலிபோர்னியா சிறையிலேயே அவன் இயற்கையான முறையில் மரணமடைந்தான். அவன் உடலை யாரிடம் ஒப்படைப்பது, எரிப்பதா புதைப்பதா என்று போலீஸார் குழம்பி நிற்கிறார்கள். நெருங்கிய உறவினர்கள் யாரேனும் முன்வந்தால் ஒப்படைப்பார்கள். இல்லாவிட்டால் காவல் துறையினரே 'நல்லடக்கம்' செய்ய வேண்டியதுதான். பிரபல திரை இயக்குநர் குவென்டின் டாரன்டினோவின் அடுத்த படம் சாள்ஸ் மன்ஸன் பற்றியதாக இருக்கும் என்று சில மாதங்களுக்கு முன் அனுமானமாகப் பேசப்பட்டது. இப்போது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. மன்ஸன் பாத்திரத்துக்கு லியனார்டோ டி காப்ரியோ, டாம் க்ஷரூஸ், பிராட் பிட் என்று முக்கிய நடிகர்களின் பெயர்கள் அடிபடுகின்றன!

இந்தத் திரைப்பட முயற்சியை பலர் விரும்பவில்லை. ஏனெனில் இத்திரைப்படம் கூட பல சாள்ஸ் மன்ஸன்களைக் கூட உருவாக்கிவிடலாம் என்ற பயம்தான் அவர்களுக்கு.

## தேசத் தலைவன் 63... (12ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர், இராணுவம், ஆயுதங்கள் தொடர்பான நூல்கள் பலவற்றை மொழிபெயர்த்துப் படிப்பதிலும், அவற்றை போராளிகளுக்கு கற்பிப்பதிலும் ஆர்வம் காட்டுபவர்.

தன்னை சந்திக்கும் போராளி-களை ஆங்கிலம், தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்கொள்ளுமாறு அடிக்கடி வலியுறுத்துவார். அவற்றுக்கான வழி வகைகளையும் ஒழுங்குபடுத்துவார்.

சிறுவயதில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், சைக்கிளோட்டம் என்பவற்றில் ஆர்வம் காட்டினார்.

பிட்டு, சம்பல், இறால் கறியை விரும்பி உண்பார். கூழையும் விரும்பிக் குடிப்பார்.

மகாபாரதக் கதையில் வரும் கர்ணனை மிகவும் நேசித்தார். எந்தச் சோதனைகளும் இன்றி ஆயுதத்துடன் பிரபாகரனை சந்திக்கும் வாய்ப்பு புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மானுக்கு மட்டுமே இருந்தது.

இந்தியாவில் இருந்தபோது மதிவதனி ஹோலி கொண்டாடினார். இதற்காக அவரை கடுமையாக பிரபாகரன் கண்டித்தார். இதனால் அவர் அழுதாராம்.

சிறுத்தைப் புலிகளை தனது செல்லப் பிராணியாக வளர்த்திருந்தார்.

0001 என்பது இவரின் இலக்கத் தகடு ஆகும். பிரபாகரனின் மெய்ப் பாதுகாவலர்களின் இலக்கம் '0' என ஆரம்பிக்கும்.

புலிகளின் முதல் தளபதியான சீலனின் இயற்பெயரான சார்ள்ஸ் அன்ரனியின் பெயரையே தனது மூத்த மகனுக்கு வைத்தார்.

மதிவதனியின் மெய்ப்பாதுகாவலராக இருந்த துவரகாவின் பெயரையே தனது மகளுக்கு வைத்தார்.

தாக்குதலுக்கு செல்லும் கரும்புலிகளுடன் உணவருந்தி, புகைப்படம் எடுத்துக்கொள்வது வழமை. எந்தச் சந்தர்ப்பத்திலும் இதனை அவர் தவிர்க்கவில்லை.

இந்தியப் படையினர் இவரைத் தேடிய காலத்தில் தான் மரணித்தால் அவர்களிடம் தனது உடல் கிடைக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். இதனால் அவர் எங்கு சென்றாலும் தன்னருகே கான் ஒன்றில் பெற்றோல் வைத்திருப்பார்.

தமிழீழ கொள்கையில் இருந்து தான் விலகினால் தனது பாதுகாவலரே தன்னை சுட்டுக் கொல்லலாம் என உத்தர விட்டிருந்தார்.

திருநெல்வேலி தபால்பெட்டி சந்தியில் இராணுவ ட்ரக் மீதான தாக்குதலிலே விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல். இத்தாக்குதலில் நேரடியாகப் பங்கேற்றிருந்தார்.

செல்லக்கிளி அம்மான் வளர்த்த பசுமாட்டை விற்றே பிஸ்டல் துப்பாக்கியை பிரபாகரன் முதன்முதலாக அமைப்புக்கு வாங்கினார்.

புலிகளின் வலிந்த தாக்குதல்களுக்கும் படையணிகளுக்கும் பிரபாகரனே பெயர் சூட்டுவார்.

புலிகள் அமைப்பில் ஏற்பட்ட முரண்பாட்டால் சில மாதங்கள் விலகிச் சென்றிருந்தார்.

பேனாவை 5 விரல்களாலும் பிடித்து எழுதும் பழக்கமுடையவர்.

இடது கை பழக்கம் உடையவராக இருந்தார்.

அலெக்ஸ் ஹேலியின், ஏழு தலை முறைகள் நாவலில் வரும் 'இடியும் மின்னலும் இல்லாமல் மழை பொழியாது. போராட்டம் நடத்தாமல் யாரும் எதையும் தரமாட்டார்கள்' என்ற வரிகளை அடிக்கோடு போட்டு வைத்திருந்தார்.

'இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி' என்ற வாசகத்தைத் தனது தினக் குறிப்பில் எழுதிவைத்துள்ளார்.

மாத்தையாவுக்கும் பின்னர் அமைப்பில் பிரதித் தலைவர் பதவியை எவருக்கும் வழங்கவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பில் முதன்முதலில் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டவர் பிரபாகரனே. 1986 இல் தொடர்பு சாதனங்களை இந்தியப் பொலிஸார் பறிமுதல் செய்தபோது உண்ணாவிரதப் போராட்டத்தில் பிரபாகரன் ஈடுபட்டார்.

# நடக்கப் போகிறார் நடராஜா

நவீன நகைச்சுவைத் தொடர் 24



– உமா சந்தோஷ்

எடுத்த பொருட்களை ஆசை தீரத் தின்றார் நடா. பின்பு அனைத்துக் கழிவுகளையும் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு ஒன்றும் அறியதவராய் ஹோலில் வந்து அமர்ந்து பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அழைப்பு மணி ஒலித்தது. போய் கதவைத் திறந்தார் நடா. அனைத்துப் பற்களும் வெளியே தெரிய சிரித்துக் கொண்டு நின்றான் ட்ரைவர். கையில் சப்தமி ஊதுபத்திப் பைக்கற்றுடன் அவன் காட்சி தந்தான்.

வெகுவிரைவாக அதைப் பெற்றுக் கொண்டவர் திடீரென சுவாமி அறைக்குள் நுழைந்து ஊதுபத்தியைக் கொளுத்தி வழிபடத் தொடங்கினார். பல தேவாரங்களைப் பாடினார். அனைத்தும் அரிவரி தொடக்கம் ஆறாவது வகுப்பு வரை ஊர் பள்ளிக் கூட வாத்தியார் சொல்லிக் கொடுத்தது. அதில் பலதைப் பிழையாகப் பாடினார். சிலதைச் சரியாகப் பாடினார். எல்லாவற்றையும் தெய்வம் ஏற்றுக் கொண்டு மௌனமாக இருந்தது.

மீண்டும் வாசல் கதவருகே இருந்த அழைப்பு மணி ஒலித்தது. கார் திரும்பிச் செல்லும் ஒசை கேட்டது. ட்ரைவர் ஓடிச் சென்று கதவைத் திறந்தான். நடா மனைவி பெரிய தாம்பாளத்தில் நிறைந்த பிரசாதத்தோடு உள்ளே வந்தாள். சுவாமி அறையிலிருந்து தேவாரத் திருப்பாடல்களின் ஒலி வந்து கொண்டிருந்தது. எட்டிப் பார்த்த நடா மனைவிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. தனது கணவனின் ஒழுக்கத்தை எண்ணி மெய்சிலிர்த்தாள்.

‘பாவம் கொஞ்ச நாளா நல்ல சாப்பாடுமில்லை. பரவாயில்லை இண்டைக்கு மட்டும் பிரசாதத்தைக் குடுக்கலாம். கடவுளின் பிரசாதம் ஒண்டும் செய்யாது’ என்று எண்ணிக் கொண்டாள்.

வழிபாட்டில் இருக்கும் நடாவைக் குழப்ப விருப்பமில்லை. கன நாட்களுக்குப் பின்னர் இப்படி வழிபடுகிறார். அவர் வழிபாட்டைத் தூர நின்று ரசித்துக் கொண்டிருந்தாள் நடா மனைவி. அவளுக்கு நடாவின் மீது இருந்த அன்பு, பாசம், நேசம், மரியாதை எல்லாம் இரட்டிப்பானது. எனவே நடா பிரார்த்தனையை முடித்துவிட்டு வெளியே வரும் வரை காத்திருந்தாள்.

நடா ஒரு செருமலோடு சுவாமி அறைக்கு வெளியே வந்தார். ஓடிச் சென்று அவர் கையைப் பிடித்தவள் அவரை சமையலறைப் பக்கம் இழுத்துச் சென்றாள். ‘பாருங்கோ! எவ்வளவு பிரசாதம் இருக்கெண்டு... சாப்பிடுங்கோ’ என தட்டில் சர்க்கரைப் பொங்கல் சிறிதளவை எடுத்துக் கொடுத்தாள். 'ஐயோ! எனக்கு இனிப்பு வேண்டாம். டொக்டர் சொன்னவர் சாப்பிட வேண்டாம் எண்டு' என்று வெகுவாகப் பிகு பண்ணினார். ‘டொக்டர் இனிப்புத்தான் சாப்பிட வேண்டாம் எண்டு சொன்னவரே ஒழிய, பிரசாதம் சாப்பிட வேண்டாம் எண்டு சொல்லேல்லையே. பரவாயில்லைச் சாப்பிடுங்கோ” என்று நடாவை வற்புறுத்த, விரும்பாதவர் போல சர்க்கரைப் பொங்கலை ஒரே தரத்தில் சுவைத்தார் நடா. பின்பு ஓடிட்டர் மனைவியும் வரவே எல்லோருமாக இருந்து பிரசாதத் தட்டைக் காலி செய்தனர்.

நடா சற்று நேரம் ஓய்வெடுத்தார். நடா மனைவி மத்தியான சாப்பாட்டிற்கு வேண்டிய வேலைகளைச் செய்யத் தொடங்கினார். சமையலறையில் கிடந்த மேசையை எறும்பு மொய்த்த படி கிடக்க அதைத் துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டாள் நடா மனைவி. திடீரென அவருக்கு அரைகுறையாகத் திறந்து கிடந்த பொம்பே சுவீட்ஸ் பெட்டி கண்ணில் படவே அதிர்ந்து போனார். தான் காலையில் எடுத்து வடிவாகப் பூட்டி வைத்த பெட்டி அரைகுறையாகத் திறந்து கிடக்கே என்று சந்தேகம் வலுக்கத் தொடங்கியது. உடனே அவரது எண்ணமெல்லாம் ட்ரைவர் மேலே வர ‘ பாரன் நம்பிக்கையா வீட்டுக்கை விட்டிட்டுப் போக ட்ரைவர் செய்த வேலையை?’ எனத் தனக்குள் யோசித்துக் கொண்டாள் நடா மனைவி. பாலுக்குப் பூனையைக் காவல் வைத்தது பிளையாகப் போய்விட்டதாக உணர்ந்தாள் நடா மனைவி. ‘நான் கதைக்கக் கூடாது. அவர் எழும்பட்டும். அப்பதான் ட்ரைவரை நாலு கேள்வி கேட்கலாம்’என்ற கோபத்தில் பல்லைக் கடித்தாள் நடா மனைவி.

மாலை மணி நான்குக்கு மேல் இருக்கும் ஒரு பெரிய கொட்டாவியுடன் எழுந்தார் நடா. மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். ட்ரைவர் சுவீட்ஸ் எடுத்த கதையைச் சொல்ல வேண்டும் என வாயை உன்னியள் நடாவின் சோம்பலைக் கண்டதும் அதை மறந்தவளாய் ‘என்னப்பா முகத்தைப் பாக்க ஒரு மாதிரியாக் கிடக்கு” என்று கேட்டதும் ‘சாதுவாத் தலை இடிக்கிது’ என்று பதில் சொன்னார் நடா. அவர் கேட்டபடி ஒரு பிளேன் ரீ போடப் போன நேரத்தில் ஹோல் செற்றியில் இருந்த நடா சற்றுச் சாய்ந்து கொண்டார்.

கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ஓடிச் சென்று கதவைத் திறந்தார் நடா மனைவி. டொக்டர் தான் ஒரு பார்சலோடு அங்கே நின்றார். ‘மகளுக்கு பேத் டே. அதுதான் அங்கிளுக்கும் ஒரு பார்சல் கொண்டு வந்தனான். மகள்தான் அங்கிளுக்கும் குடுக்க வேணுமெண்டு அடம்பிடிச்சவ” என்ற டொக்டர் ‘அங்கிள் எங்கை’ என்று கேட்டபடி வீட்டின் உள்ளே தலையை எட்டிப் பார்த்தார். ‘ஓம் டொக்டர் நீங்கள் வந்தது நல்லதாப் போச்சு. இப்பதான் தலையிடி எண்டு சொல்லிப்போட்டு இருக்கிறார்” என்று சொல்லி டொக்டரை வீட்டிற்குள் அழைத்துக் கொண்டு போனாள் நடா மனைவி.

செற்றியில் சாய்ந்தபடி மூச்சுப்பேச்சில்லாமல் இருந்த நடாவைக் கண்டதும் பயந்து போனாள். இங்கும் அங்குமாக ஓடித் திரிந்தவள் அறைக்குள் போய் குளுக்கோ மீற்றரை எடுத்துக் கொண்டு வந்தாள்.

‘சுகர் லெவல்தான் கூடிப்போச்சு’ என்று கன்னத்தைப் பிசுக்கியவர் ஒரு வெள்ளைத் தாளை வாங்கி உடனடியாகக் கொடுக்க வேண்டிய இரண்டு மருந்துகளை எழுதிக் கொடுத்தார். நடா மனைவி ட்ரைவரைத் தேடினாள். அவன் வெளியே போய்விட்டு வந்து கொண்டிருந்தான். தனக்கிருந்த ரென்சனை அவன் மீது காட்டினாள் நடா மனைவி. அவன் மருந்து வாங்கப் போனதும் உள்ளே வந்ததும் டொக்டர் பல கேள்விகளைக் கேட்டார். மதியம் தான் கொடுத்த பிரசாதத்தைப் பற்றிச் சொன்னாள். ‘ இந்தச் சிறிய அளவு பிரசாதத்துக்கு இவ்வளவாகச் சுகர் ஏறாது. அங்கிள் ஏதோ பெரிதாகச் சாப்பிட்டிருக்கிறார்” என்று பதில் சொன்னார் டொக்டர்.

பாவித்த குளுக்கோ மீற்றரை வைப்பதற்காக அறைக்குச் சென்ற நடா மனைவிக்குக் கட்டிலில் சில எறும்புகள் தென்பட்டன. அந்த எறும்புகள் தலையணைக்கு அடியில் செல்வதைக் கண்டாள் நடா மனைவி. தலையணையைத் தூக்கிப் பார்த்தால் அதற்கு அடியில் சில சொக்லேட்டுகளும், சுவீற்ஸ்சுகளும் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் அவளது ரெம்பர் தலைக்கேறியது.
காளி வேசமெடுத்தாள் நடா மனைவி. அறைக்கு வெளியே வந்தாள். டொக்டர் நிற்பதையும் பொருட்படுத்தாதவராக நடாவைத் திட்டித் தீர்த்தார். அப்பதான் பொம்பே சுவீட்ஸ் திருடிய கள்வன் யாரேண்டு அவளுக்கு விளங்கியது. வீணாக ட்ரைவரை சந்தேகப்பட்டதை எண்ணினாள்.

(தொடரும்)

## குடியிருப்பு கல்லறையின் குரல்

முல்லை நிலப்பரப்பின்
பெரும் ஊராம்
எந்தன்
புதுக்குடியிருப்பு மண்ணே
வணக்கம்

உன்நிலத்தில்
கால்பதித்த
நினைவு அகலாது
எழுதுகிறேன்

செம்மண்
வீதிகளில்
நடந்து சென்ற
பொழுதுகளை
ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்

நாளாந்தம்
ஏறி இறங்கிய
கொல்லைப்புற
பாலைமரமும்
மரமுந்திரிகை மரமும்
என் மனதில்
நிழல் தந்து நிற்கின்றன

ஓடிபாடி பாடி
பற்பல படித்துக்
களித்திட்ட
எந்தன் பாடசாலையும்
தமிழ் ஆசானும்
என் மனக்கண்ணில்
இசைவும் அசைவும்
கொள்கின்றன

வைகாசிச் சோளகத்தோடு
சிலம்புக் கதைபேசி
வற்றாப்பளைப்
பொங்கலுக்குப்
போய்ச் சேர்ந்த
பாதையும்
உதுதான்

தலைநிமிர்ந்து நிற்க்கும்
தேக்குகள்
பலாக்கள்
அருள் பாலிக்கும்
சைவக் கோயில்கள்
வேத ஆலயங்களை
நினைத்துப்பார்க்கின்றேன்
நெஞ்சத்தில்
இருத்திப்பார்க்கிறேன்


செந்தமிழைக் காதலித்து
நெடுந்தூரப் பயணி ஆனேன்...
நான் உங்கும் இல்லை
இங்கும் இல்லை

எங்கள் ஊர்
தேக்குமரங்கள்
துன்பத்தையா,இன்பத்தையா
தேக்கிவைத்திருக்கின்றன

எந்தன் நிலத்து
பலாமரங்கள்
ஏதோவிதத்தில்
நிறைவை நோக்கிய
சுவையான
பலாப் பழங்களையா
சுமந்து நிற்கின்றன

என் பயணத்தை
அளந்து பார்க்கின்றேன்
அளவுகோல் இல்லை
நீதியான செங்கோல் உங்கு
உயர்ந்து நிற்க
வேண்டும் என்று
எதிர்பார்க்கின்றேன்

ஆ. முல்லைதிவ்யன்



# துயிலும் இல்லங்களை கொச்சைப்படுத்தாதீர்...!

அடுத்த பிறவியில்
தமிழனாகப் பிறப்பேன்
அப்போ என் குலம்
ஆண்டு கொண்டிருக்கும்
கொடியும், கோட்டையும்
வாளும் முரசும்
படையும் படைத்த
பைந்தமிழ் மண்ணில்
யார் கட்டளைக்கும்
அடங்கா ஒரு புலி
ஒப்ப வீரனாய்
உறுமி நடப்பேன்
மார்பு தூக்கி
மலை வலம் வருதல்
ஆவி போலும் ஆனா
என் தமிழை
அந்நாள் எவன் பழித்தாலும்
தாவி வீழ்த்தி பாடை தந்து
தமிழ் ஊரெல்லாம்
சாவலம் உணர்வேன்
பன்னிராயிரம் படை வரும்
எனினும்
கண் இமைப் பொழுதில்
வென்று காட்டுவேன்
என்னை போலவே
இளைஞர் பல்லோர்
குண்டுகள் தாங்கி
குருதியில் தோய்ந்து
சண்டைக்களத்தில்
இதோ சாய்கின்றேன்
அடுத்த பிறவியும் அடியேன்
தடித்த பச்சை
தமிழ்ப் பிறவியே .

இது காசி ஆனந்தன் கவி வரிகள் ஒவ்வொரு தமிழ் வீரனின் உணர்வுகளும் எப்படி இருக்கும் என்பதற்கு இக்கவிதை ஒரு எடுத்துக் காட்டு. ஒரு மாவீரரின் தந்தை 2017 நவம்பர் 13 அன்று யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் வெளியிட்ட கருத்தை ஒட்டி இக் கட்டுரையை எழுத விளைகின்றேன்

1982 ஆம் ஆண்டு காலப்பகுதி அது. விடுதலைப்புலிகள் இயக்கம். மெல்ல மெல்ல வளர்ந்து கொண்டிருந்தது.வெளி உலகத்துக் குத் தெரியாமல் தங்களை சமூகத்தில் இருந்து மறைத்துக்கொண்டு, சமூகம் சார்ந்த இனத்துக்காக போராடிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு நகர்வுகளும் மிக அவதானமாக நகர வேண்டிய காலம் அது கரந்தடிப் படைத் தாக்குதல் முறையில் இயக்க நகர்வுகள் நடந்துகொண்டிருந்தன.

பொதுமக்களிடம் தங்களை வெளிக்காட்டவும் முடியாது. உதவிகள் கேட்கவும் முடியாது. உணவு, தங்குமிடம், பாதுகாப்பு எல்லாமே தாங்களாகவே தேடிக்கொள்ள வேண்டும். ஒரு சிறு தவறு கூட பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விடக் கூடிய சூழ்நிலை இது. விடுதலை மீதான பற்று, சிங்கள ஏகாதிபத்தியத்தின் மீது பல தமிழர்களுக்கு வெறுப்பு இருந்தாலும், அவர்களை இனம் காண்பது எப்படி? அவர்களின் ஆதரவை எப்படிப் பெறுவது,? அப்படிப் பெறும்போது அவர்கள் மீதான நம்பிக்கை எப்படிக் கொள்வது ? ஒவ்வொருவரையும் சந்தேகக் கண்கொண்டே பார்க்க வேண்டி இருந்தது.

போராளிகள் என்று புறப்பட்டவர்களை விட இவர்களுக்கு ஆதரவு கொடுப்பவர்களுக்கு சிங்கள படைகளிடம் இருந்து பாதுகாப்பு கொடுக்க வேண்டியது இவர்களின் கடமையாக இருந்தது. 'தான் போக வழியில்லை தவிலும் ஒரு மாராப்பு" என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கின்றது. அதே போன்ற ஒரு நிலைதான் அன்று இருந்தது. ஒரு சிறு நகர்வுத் தடம் கிடைத்தால் கூட அதனைத் தேடி மோப்பம் பிடித்து பின் தொடர்வதற்கு காவல் துறையினரும், புலனாய்வுத் துறையினரும் கண் மூடாமல் காத்திருப்பார்கள். இப்படியான ஒரு நாள் தான் அது.



விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பல கல்வியாளர்கள், பொதுமக்கள் இருந்தார்கள். அவர்களில் சிலருடன் இயக்க உறுப்பினர்கள் சில தேவைகளின் நிமித்தம் பழகிக் கொண்டு இருந்தார்கள். இவர்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு .திருமதி நித்தியானந்தன் நிர்மலா குடும்பமும் ஒன்றாக இருந்தது. இவர்களின் வீட்டுக்கு இயக்க உறுப்பினர்கள் வந்து போவதை இராணுவம் மோர்ந்து மணம் பிடித்திருந்தார்கள் . இந்த வகையில் திரு .திருமதி நிர்மலா நித்தியானந்தன் அவர்களின் வீட்டுக்கு பொலிஸார் வரப் போகிறார்கள் என்பதை அறிந்த புலிகள் அந்த வீட்டுக்கு ஒரு போராளியை அனுப்பி குறிப்பிட்ட வீட்டாரை வேறு இடம் மாறி இருக்குமாறு சொல்லி அனுப்பி இருந்தார்கள்.

குறிப்பிட்ட போராளி அந்த வீட்டுக்குச் சென்று நடக்கவிருக்கும் சம்பவத்தைச் சொன்னார். வீட்டுக்காரர்களும் சம்பவத்தை கேட்டறிந்தார்கள். ஆனால் அதன் தாக்கம் என்ன என்பதை அறிந்திருக்கவில்லை. போராளியை நன்கு அறிந்திருந்த அவர்கள் அவருக்கு அன்றாவது ஒரு நல்ல உணவு கொடுப்பதற்கு ஆசைப்பட்டார்கள். இதன்படி அந்தப் போராளியை இருக்க வைத்து விட்டு சமையல் வேளையில் தீவிரமாக இருந்தார்கள் .இந்த நேரத்தில் சொல்லி வைத்தல்போல் இராணுவ வண்டியும் வந்து நின்றது. வீடு சுற்றி வளைக்கப்படுவ-தாக அறிந்த அவர் ஒரு பக்கத்தால் ஓடி மதிலால் ஏறிக் குதிக்கும் போது இராணுவத்தினரின் துப்பாக்கி சூடு அவர் வயிற்றில் பாய்கிறது.

அந்தக் காலத்தில் இயக்கத்திடம் இருந்த மிகப் பெரிய வாகனம் மிதி வண்டி மாத்திரமே. நல்லவேளையாக மதிலுக்கு வெளிப்பக்கத்தில் வீழ்ந்த அவர் வயிற்றிலே ஏற்பட்ட காயத்துடன் வாகனத்தையும் விட்டுவிட்டு ஓடும்போது வீதியில் வந்த ஒருவருடன் முட்டுப்படுகிறார் இருவரும் ஒரே கணத்தில் வீழ்ந்து எழுந்து சுதாகரித்து கொள்கிறார்கள்.

அடுத்த நிமிடமே எதிர்விளைவு எதனையும் கருதாத அந்த மனிதர் இராணுவத்தினரின் வேட்டுக்களை விட விவேகமாக அவரது மிதி வண்டியில் ஏற்றுக் கொண்டு சங்கர் அடையாளம் காட்டிய அன்ரன் என்ற போராளியிடம் இவரை ஒப்படைக்கிறார். இவர்தான் பின் நாட்களில் ஈழ நாதம் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த ஜெயராஜ். அன்று நிர்மலா, நித்தியானந்தன் ஆகியோர் கைது செய்யப்படுகின்றனர் .

ஓடித் தப்பிய போராளிக்கு மருந்து கட்டுவதற்கு சரியான இடம் கிடைக்கவில்லை.மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை சக உறுப்பினர்களாலேயே முதலுதவி சிகிச்சை அளிக்கப்படுகிறது. பொதுவாக அந்த நேரத்தில் தமிழகத்துக்கு சில தேவைகளுக்காக போராளிகள் சென்று வருவது வழக்கம். அங்கு வைத்து குறித்த போராளிக்கு மருந்து செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

ஆனால் வண்டி, படகு பிடித்து உடனடியாக தமிழ் நாட்டுக்குச் செல்வதற்குப் பல தடைகள் ஏற்படுகின்றன. காயப்பட்ட போராளியைத் தேடி யாழ்ப்பாணப் பகுதிகள் எல்லாம் சுற்றி வளைப்புக்களும் வீதிச் சோதனைகளும் நடக்கின்றன. இப்படியான சூழ்நிலையில் காயப்பட்டவரை உடனடியாக மருத்துவச் சிகிச் சைக்கு கொண்டு செல்வது தடைப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் இருந்து வல்வெட்டித்துறை சென்று அங்கிருந்து வண்டி எடுத்து தமிழ்நாட்டுக்கு போவதற்கு ஏற்பட்ட தாமதம் போராளியின் உடல்நிலையை மிகவும் மோசமாக பாதித்திருந்தது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பழைய நெடிய அரசியல்வாதியின் உதவியோடு தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு வைத்தியரால் வைத்தியம் செய்யப்பட்டாலும் உரிய நேரத்தில் மருந்து செய்வதில் ஏற்பட்ட தாமதம் மருத்துவ உதவியின் பலன் அற்றுப் போகின்றது. 1982 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27திகதி எவரும் நினைவு தப்பும் போது

(மறு பக்கம் பார்க்க)

# துயிலும் இல்லங்களை கொச்சைப்படுத்தாதீர்...!

அரற்றுகையில் "அம்மா .... அம்மா... " என்றே சொல்வர். ஆனால் இவரோ 'தம்பி... தம்பி ... " என அரட்டினார். தலைவர் பிரபாகரன் அவர் மனதில் எவ்வளவு ஆழமாக பதிந்திருந்தார். என்பதற்கு இது ஒரு உதாரணம். புலிகளின் முதல் வித்து - உயிர் பிரிகிறது.

"இதுவே மாவீரர் தினத்தின் நாள்"

முதல் வித்தான சங்கர் வீரச்சாவடைந்தார். அந்த நாளுக்கு முதல் நாள்தான் தலைவர் அவர்களின் பிறந்தநாள். ஆனால் சங்கர் வலியால் துடித்த நாள் நவம்பர் 26. என்பதால் அவர் ஒரு நாளும் தனது பிறந்த நாளைக்கு கொண்டாடியதே இல்லை. சங்கர்தான் புலிகளின் முதல் வித்தாக இருந்தாலும் இவரின் மரணம் போராளிகளைத் தவிர வேறு எவருக்கும் தெரியவில்லை. சங்கரின் வித்துடல் தமிழ்நாட்டில் ஒரு இடத்தில் அக்கினியுடன் சங்கமம் ஆகிவிட்டது. இது புலிகளின் முதல் மாவீரரின் கதை.

ஒரு காட்டிக்கொடுப்பு சம்பவத்தால் இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டில் சீலன், ஆனந்ஆகிய இருவரும் 15.07.1983 அன்று வீரச்சாவடைந்தார்கள். இதற்கு எதிர்த் தாக்குதலாக 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் நாள் திருநெல்வேலியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 13. இராணுவத்தினர் கொல்லப்பட்டு இலங்கை அரசாங்கத்தையும், இராணுவத்தினரையும் கதிகலங்க வைத்தபோதே செல்லக்கிளி அவர்கள் வீரச்சாவடைந்தார்.

சீலன் , ஆனந் ஆகியோரின் வித்துடல்கள் கிடைக்கவில்லை ஆனால் லெப். செல்லக்கிளி அம்மானின் வித்துடல் கிடைத்தும் இறுதி நிகழ்வு கூட இரகசியமாகத் தான் நடத்தப்பட்டது. லெப். செல்லக்கிளி அம்மானின் புகைப்படம் விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்டு தாக்குதலுக்கான உரிமையும் கோரப்பட்டது. ஒரு துயிலுமில்லத்தில் வைத்து அஞ்சலி நிகழ்வு செய்து வித்துடல் விதைக்கப்பட முடியாத காலமாக அந்தக் காலம் இருந்தது.

சங்கர், சீலன் , ஆனந், செல்லக்கிளி அம்மான் ஆகியோரின் இழப்புக்கள் மிகவும் வேதனையானது - தாங்கிக் கொள்ள முடியாத துயரமாகும். சுமார் 29 பேர் அளவிலேயே இருந்த இயக்கத்தில் நான்கு உறுப்பினர்களின் இழப்பு பேரிழப்புத்தான். இதன் பின்பு இயக்கம் இமயம்போல் வளர்ந்தது. பல ஆயிரம் இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தார்கள் போராட்டம் தீவிரம் அடைந்தது.

சங்கர், சீலன், ஆனந், செல்லக்கிளி அம்மான் முதலான வித்துக்கள் வீழ்ந்து விருட்சமாக வளர்ந்து கொண்டிருந்தனர. போராட்டம் வளர வளர வீரச்சாவு கூடிக்கொண்டிருந்தது. ஒரு விருட்சம் வளரும்போது அதன் இலைகள் உதிர்வதுபோல் நிகழ்வுகள் நடந்தேறிக் கொண்டிருந்தன. ஆனால் ஒவ்வொரு மரணங்களும் தமிழீழத்தின் சரித்திரத்தில் பதிவாகிக்கொண்டு இருந்தது. இந்தச்சம்பவங்களில் எல்லாம் பல முன்னுரிமை உடைய நிகழ்வுகளும் நடந்தன. முதலாவது கரும்புலியாக மில்லர் அவர்களின் வீரச்சாவு பதியப்பட்டது. நெல்லியடி பாடசாலையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் மீதான தாக்குதல் ஒரு புதிய சரித்திரம் படைத்தது. முதலாவது வரிசையில் வீர மரணங்களை குறிப்பிடலாம். பெண் புலி மாவீரர். சைனட் கடித்த மாவீரர், கடற்கரும்புலி மாவீரர், வான்படைத் தாக்குதல் மாவீரர்,வேவுப்படை மாவீரர், மாமனிதர் , நாட்டுப்பற்றாறாளர் இழப்புக்கள், குமரப்பா, புலேந்திரன் உட்பட 12. வேங்கைகள் இந்த வகையில் திலீபன், அன்னை பூபதி ஆகியோரின்



தியாகங்களும் சரித்திரம் படைத்தவைதான்.

சங்கர் அவர்களின் முதலாவது வீரச்சாவிலிருந்து 2009 வைகாசிமாதம் 18 ஆம் திகதி நள்ளிரவு வரையிலான காலப்பகுதியில் நாற்பது ஆயிரத்துக்கு மேற் பட்ட மாவீர்கள் இந்த மண்ணில் விதைக்கப்பட்டிருக் கிறார்கள். கடைசி நாட்களில் நடை பெற்ற இன அழிப்பு யுத்த காலத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் சரியான கணக்கெடுப்புக்கள் பதிவு செய்யப்படவில்லை. அதேபோல்தான் லட்சத்துக்கு மேற் பட்ட பொது மக்களின் மரணங்கள். பல ஆயிரக்கணக்கான புலி வீரர்களின் இரத்தமும், சதையும் புதைக்கப்பட்ட இலட்சக்கணக்கான பொது மக்களின் கண்ணீரால் நனைந்து கழுவப்பட்டதுதான் துயிலுமில் ்கள்.

இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேற ஆரம்பித்த பின் 1989 இல் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் என்னும் இடத்தில் தான் முதலாவது மாவீரர் நாள் கொண்டாடப்பட்டது. குறிப்பிட்ட மாவட்டத்தை விட்டு இந்திய இராணுவத்தினர் வெளியேறி இருந்தனர். மாவீரர் தினம் 1990 முதல் ஆரம்பத்தில் நள்ளிரவு 12 மணிக்கு தீபம் ஏற்றுதல், மணி ஒலித்தல், தலைவரின் உரை என்ற வரிசைக் கிரமத்தில் மேற் கொள்ளப்பட்டது. பின்னர் இக்கட்டான காலப்பகுதியைக் கருத்தில் கொண்டு நேரமாற்றம் செய்யப்பட்டது.

மாவீரர் தினம் என்பது ஒரு களியாட்ட நிகழ்வாகவோ, ஆடம்பர நிகழ்வாகவோ இல்லாமல் உணர்வுபூர்வமான நிகழ்வாகவே நிகழ்ந்து வருகின்றது.

ஆனால் இன்று மாவீரர் துயிலும் இல்லங்களில் வைத்து சிலர் அரசியல் இலாபம் தேட முனைவது வெட்கக்கேடான விடயமாக இருக்கின்றது. மாவீரர் துயிலும் இல்லங்களைத் துப்பரவு செய்கிறோம் என்று கூறிக்கொண்டு தங்களுடைய கட்சியின் பதாகைகளைப் போட்டு பின்னால் அவர்கள் நின்று படம்பிடித்து விளம்பரம் தேடுகிறார்கள். மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வாகரை துயிலுமில்லத்தை வெளியாக்கி துப்பரவு செய்வது போல் படம் பிடித்து விளம்பரம் காட்டியிருந்தார்.

புழுதி படியாத மேனியுடனும், கசங்காத ஆடையுடனும் மாவீரர் துயிலுமில்லத்தை துப்பரவு செய்து விட்டு ஆடம்பரமான வாகனத்தில் சென்ற அந்த நாடாளுமன்ற உறுப் பினரைப் பார்த்து தமிழ் மக்கள் வெட்கப்பட வேண்டி இருக்கின்றது. யுத்தம் உக்கிரமான 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உயிலங்குளம், வன்னி விளாங்குளம் எனப் பல துயிலுமில்லங்கள் புலிகளால் விடப்பட்டு பின்வாங்கப் பட்டிருந்தது இந்தக் காலப்பகுதியில் விசுவமடு என்ற இடத்தில் உள்ள பெரிய காட்டை அழித்துத்தான் ஒரு துயிலுமில்லம் உருவாக்கப்பட்டது. இதனை முன்னின்று செய்தவர்களில் மட்டக்களப்புபைச் சேர்ந்த போராளிகள் கூடுதலாக இருந்தனர்.

இவர்களே காடுகள் வெட்டி வேர்கள் பிடுங்கி நிலம் திருத்தி துயிலும் இல்லத்தை உருவாக்கினார் கள். இந்தத் துயிலுமில்லத்தில் முதலாவதாக விதைக்கப்பட்டதும் மடடக்களப்பு - அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த ஒரு மாவீரரின் வித்துடல்தான். விசுவமடு துயிலும் இல்லத்தில் 1200 இற்கும் மேற்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட போராளிகளின் வித்துடல்கள் விதைக்கப்பட்டன.

தாங்களே துயிலுமில்லம் உருவாக்கி தாங்களே சவப்பெட்டிக ளைச் செய்து செங்களம் ஆடி வீரச்சாவடைந்த பல்லாயிரக்கணக் கான மாவீரர்கள் தான் இந்த துயிலு மில்லங்களில் உறங்கிக் கொண்டிருக் கிறார்கள். இவர்கள் எல்லாம் தங்களுடைய வேலைகளை விளம்பரப்படுத்தவில்லை. இதை ஒரு கடமையாகவே செய்தார்கள். கண்ணீராலும், செங்குருதியாலும் பல்லாயிரம் உடல்களால் நிரப்பப்பட்ட புனிதம் தான் இந்த துயிலும் இல்லம். இது ஒவ்வொரு மானமுள்ள தமிழனுக்கும் கோயில். இப்படிப்பட்ட புனித தலத்தை இன்றைய வங்குரோத்து பிடித்த அரசியல்வாதிகள் யாரும் களங்கப் படுத்தி விடாதீர்கள். உங்களின் அரசியல் முகவரிகளை துயிலும் இல்லங்களில் பதித்து மாவீரர்களை யும் அவர்களை இந்த மண்ணுக்கு தந்த பெற்றோரையும் அவமதித்து விடாதீர்கள் . உண்மையாகவே நீங்கள் எவருமே மாவீரர் தின நிகழ்வு நடந்த காலங்களில் எல்லாம் துயிலும் இல்லங்களின் பக்கம் எட்டிப் பார்க்காதவர்கள்.

இன்று மட்டும் என்ன உங்களுக்கு மாவீரர்கள் மீதும் துயிலுமில்லங்கள் மீதும் பற்று வந்து விட்டது. தயவு செய்து, தயவு செய்து.. தயவுசெய்து ... உங்களின் உளுத்துப்போன அரசியல் கருத்துக்களை இங்கே விதைக்க நினைக்காதீர்கள் உங்களை விளம்பரப்படுத்த மாவீரர்களை பயன்படுத்தாதீர்கள்.

இது புனிதமான நாள் இங்கே அமைதிப் பேணுங்கள் கண்ணீரோடு தங்கள் உறவினர்கள் உறைவிடத்தைக்காண ஓடிவரும் மக்களுக்கு உபத்திரம் செய்யாதீர்கள். இது தங்கள் உறவினர்களின் ஆன்மா வோடு உறவினர்கள் உறவாடும் நாள். அவர்கள் தங்கள் வேதனைகளை கொட்டித் தீர்த்து ஒப்பாரி வைத்து அழ விடுங்கள். அவர்களின் ஆழமான அன்பை விதைத்து விட்டு போகட்டும். தேசியத் தலைவர் மாபெரும் மனிதர் பிரபாகரன் மட்டுமே இங்கே உரையாற்ற தகுதி பெற்றவர் .

எல்லோரும் வாருங்கள் இது தமிழரின் சரித்திரத்தை உதிரத்தால் எழுதிய உறைவிடம். இது எல்லோருக்கும் பொது இடம் அமைதியாக தீபம் ஏற்றுங்கள் உங்கள் உறவுகளுக்காக வருடத்தில் ஒரு நாள் நீங்கள் அனுமதி பெறுங்கள்.



நா. யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

04

அவனோ முத்தம்மாவுடன் நிற்பதற்காக எவ்வளவு நேரமும் தோட்டத்தில் வேலை செய்யத் தயாராயிருந்தான். "இல்லையய்யா... நான் இறைக்கிறன்.." என்றான் அவன். "நீ விடியத்துடக்கம் தண்ணி மாறுறாய்.. களைச்சுப் போனாய்... போய் ஆறுதலாய் இரு" என்றுவிட்டு மண்வெட்டியை வாங்கினார் பரமசிவம். எதுவுமே செய்ய முடியாத நிலையில் மண்வெட்டியைக் கொடுத்துவிட்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டான் சுந்தரம். நடு வாய்க்காலுக்கால் வந்தபோது ஒரு முறை திரும்பி முத்தம்மாவைப் பார்த்தான். அப்பொழுது அவளும் அவனையே பார்த்ததைக் கண்டுகொண்டான். அவன், தான் பார்த்ததைக் கண்டுவிட்டான் எனத் தெரிந்ததும் முத்தம்மா தலையைக் குனிந்து கொண்டு மிளகாய் பிடுங்க ஆரம்பித்தாள்.

சுந்தரம், "போக விடை தாருமணை பெற்றவளே தாயே! [illegible] நப் பொற்கொடியாள் மாலையிடம் பெற்றவளே தாயே" எனப் பாடிக் கொண்டே நடக்க ஆரம்பித்தான். அவ[illegible] மனதில் பாட்டு, "போக வ[illegible] தாருமணை ஆரியப்பூமாலை எந்தன் பெற்றவளாம் தாயிடமே ஆரியப்பூமாலை", என்று அமைந்திருந்தால் மிகவும் பொருத்த மாக இருக்கும் போல ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது. அவன் வீட்டுக் கடப்படிக்கு வந்தபோது அவனின் நண்பன் செல்வம் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான்.

அவன் சுந்தரத்தைக் கண்டதும் சைக்கிளை நிறுத்திவிட்டு, "நீ போகேல்லயே...? என்று கேட்டான்.

"எங்கை?"

"இயக்கம் ஏதோ கூட்டமெண்டு தட்சிணாமருதமடு பொது நோக்கு மண்டபத்துக்கு வரச்சொல்லியிருக் குது", என்றான் அவன்.

"என்ன கூட்டமாம்?"

"என்னண்டு தெரியேல்ல... வாவன் போவம்..", எனக் கேட்டான் செல்வம்.

"ம்.. இயக்கம் கூப்பிட்டால் போகத்தானே வேணும்... போகேக்க இதால வாவன் நானும் வாறன்!" என்றான் சுந்தரம்.

"ஓ.. இரண்டு பேரும் போவம்", என்றுவிட்டுப் புறப்பட்டான் செல்வம்.

அன்று மாலை பொதுநோக்கு மண்டபத்துக்கு அவர்கள் போனபோது அங்கு ஏற்கனவே முப்பது, நாற்பது வாலிபர்கள் கூடிநின்றனர். எவருக்குமே என்ன கூட்டம் என்பது தெரிந்திருக்க வில்லை. சிறிது நேரத்தில் வட்டப் பொறுப்பாளர் வந்து கூட்டத்தை ஆரம்பித்தார். அவர் ஒரு முக்கிய விஷயமாக கொஞ்சப் பேர் தேவைப்படுவதாகவும், அடுத்த நாள்தான் திரும்ப முடியும் எனவும் விருப்பமானவர்கள் வரும்படியும் கேட்டுக்கொண்டார். பெரும்பாலானவர்கள் சம்மதம் தெரிவித்தனர்.

செல்வம், "வீட்டை சொல்லிப்போட்டு வாறம்!" என்றான்.

"அது தேவையில்லை.. நாங்கள் அறிவிச்சு விடுறம்!" என்றார் பொறுப்பாளர்.

செல்வமும் சுந்தரமும் அவர்களுடன் போக முடிவெடுத்தனர்.

சிறிது நேரத்தில் வந்த வாகனத்தில் அனைவரும் ஏறிக்கொண்டனர். பாலம்பிட்டி நோக்கிய பாதையில் போன வாகனம் சிறிது தூரம் சென்ற பின்பு ஒரு காட்டுப்பாதையில் இறங்கியது.

அந்தச் சுற்றாடலே இருளில் கனத்துப் போய்க்கிடந்தது. எங்கும் ஒரே நிசப்தம். வழமையாகக் கோஷ்டி கானமிசைக்கும் சில வண்டுகள் கூட அன்று அமைதி பூண்டுவிட்டன. போராளிகள் வரப்போகும் கட்டளையை எதிர்பார்த்து உருமறைப்புச் செய்து படுத்திருந்தனர். எங்கோ தொலை தூரத்தில் ஆட்காட்டியின் குரல் ஒருமுறை ஒலித்து ஓய்ந்தது. சங்கரசிவம் அவசரமாக இரவுப் பார்வைச் சாதனத்தை எடுத்து அதனூடாக சுற்றும் முற்றும் பார்த்தான். எவ்வித அசைவும் தென்படவில்லை. கிழக்குத் திசையில் சந்திரன் தலை நீட்டவே மிக மங்கலான ஓர் ஒளி பரவ ஆரம்பித்தது. போராளிகள் முகாமின் பக்கமிருந்து போன எறிகணை முகா முக்குள் வீழ்ந்து வெடிக்க முகாமின் சகல விளக்குகளும் அணைந்தன. ஷெல், மின் பிறப்பாக்கியின் மீது விழுந்திருக்க வேண்டும். கட்டளை வெடியதிரவே சிவத்தின் அணியினர் படையினரின் நிலைகளை நோக்கிப் பாய்ந்தனர். படையினர் விளக்குகள் அணைந்த அதிர்ச்சியிலிருந்து மீள முன்பே அவர்களை நோக்கி ரவைகள் பாய ஆரம்பித்தன.

சங்கரசிவம் ஏற்கனவே எதிர்பார்த் ததுபோன்று முன்னரங்கத் தாக்குதல் கள் இலகுவாக இருக்கவில்லை. திடீரென விளக்குகள் அணைந்ததாலும், அதேவேளையில் ரவைகள் அடர்த்தியாக வந்து கொண்டிருந்ததாலும் சில நிமிடங்கள் தடுமாறிப் போன படையினர் சில நிமிடங்களில் தம்மை சுதாகரித்துக்கொண்டு திரும்பித் தாக்க ஆரம்பித்தனர். அந்தச் சில நிமிடங்களில் காயப்பட்டவர்களையும் இறந்தவர் களையும் தூக்கிக் கொண்டு சிலர் ஓடுவது மங்கிய நிலவொளியில் அவனின் கண்களில் பட்டது.

கண்ணிவெடிகளை அடையாளம் கண்டு அவற்றினை செயலிழக்கச் செய்தவாறே துரிதமாக போராளிகள் முன்னேற ஆரம்பித்தனர். முன்னரங் கில் நின்ற படையினர் முழுமை யாகவே பின்வாங்கிவிட்டனர். எனினும் அந்த வரிசையில் நின்றவர் கள் கடுமையாக எதிர்த்தாக்குதல் தொடுத்தனர். சண்டை சற்று உக்கிரமாகவே நடந்தது. படையினருக்குப் பின்னால் ஒரு பற்றை அசைவது போல தோன்றவே, அவர்களுக்கு ஆதரவாக டாங்கி வந்துகொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டான். உடனடியாக ஆர்.பி.ஜி. போராளிகளுக்குக் கட்டளை கொடுத்தான். ஆனால் டாங்கி ஆர்.பி.ஜியின் சூட்டெல்லைக்கு வெளியே தான் நின்றது.

படையினருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ரவைகள் மத்தியில் ஆர்.பி.ஜியைக் கையாண்ட கமலுக்கு முன் செல்ல முடியவில்லை. ஆனால் டாங்கியைச் செயலிழக்கச் செய்யாவிடில் போராளிகளுக்கு அதிக இழப்புக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே கமல் ஊர்ந்தவாறே தனது நிலையை இன்னொரு திசைக்கு மாற்றிக்கொண்டான். அது கூட அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. எங்கிருந்தோ பாய்ந்து வந்த ரவையொன்று அவனின் காதருகால் அவனைக் கடந்து சென்றது. அவனுக்கு அதைப் பெரிதுபடுத்த நேரமிருக்கவில்லை. தன்னிலிருந்து சில அடிகள் தொலைவில் படுத்திருந்து ஒரு படையினன் சுடுவதையும், அருகில் பல சடலங்கள் சிதறிக்கிடப்பதையும் உருமறைப்பிலிருந்த பாலன் கண்டுகொண்டான். மெல்லத் தனது டொங்கானை எடுத்து சுட்டுக் கொண்டிருந்த படையினனைக் குறிவைத்தான். அவன் அசைவு ஓய்ந்தது.

அந்த இடைவெளியை வேறு படையினர் நிரப்பு முன்பாக வேகமாக முன்னேறி டாங்கியின் சுடுகுழலை நோக்கி ஆர்.பி.ஜியை செலுத்தினான் கமல். குறிதவறாத அந்தத் தாக்குதலில் டாங்கி செயலிழந்தது. டாங்கி செயலிழந்த நிலையில் போராளிகள் வேகமாக முன்னேற ஆரம்பித்தனர். இரண்டா வது வரிசையும் ஈடாட்டம் காண ஆரம்பித்தது. பிரதான படைமுகாமி லிருந்து உதவிக்கு வர முடியாமல் குட்டிசிறீ அணியினர் முகாம் வாசல், வேலிப்பகுதிகளை நோக்கி மோட்டார்களைப் போட்டுக் கொண்டிருந்தனர். மோட்டார் நிலைகளை நோக்கி எறிகணைகள் வந்து கொண்டிருந்ததால் ஓடி ஓடி மோட்டார் நிலைகளை மாற்றி மாற்றி அமைத்து தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தனர்.

மோட்டார் தாக்குதல் நிறுத்தப் படவே முகாமை அண்டிய பகுதிகளில் வலப்புறமாக ஒரு அணியும், இடப்புறமாக ஒரு அணியும் தாக்குதலை மேற்கொண்ட வாறே உள்ளே இறங்கினர். தாங்கள் சுற்றிவளைக்கப்படப்போகும் அபாயத்தைப் புரிந்து கொண்ட படையினர், இறந்தவர்களையும் காயப்பட்டவர்களையும் தூக்கிக் கொண்டு பிரதான படைமுகாமை நோக்கி பின்வாங்க ஆரம்பித்தனர். சிவத்தின் அணியினர் தொடர்ந்தும் முன்னேறினர். ஏறக்குறைய இப்போது பிரதான முகாம் மூன்று பக்கங்களாலும் சுற்றிவளைக்கப்பட்டு விட்டது. போராளிகளின் எறிகணைகள் தொடர்ச்சியாக முகாமுக்குள் விழ ஆரம்பித்தன.

போராளிகள் மீதான படையின ரின் தாக்குதல்கள் பலவீனமடைந்த திலிருந்தே சிவம் படையினர் குழப்ப மடைய ஆரம்பித்து விட்டனர் என்பதைப் புரிந்து கொண்டான். சக போராளிகளுக்கு மேலும் மேலும் கட்டளைகளை வழங்கி தாக்குதலை வேகப் படுத்தினான். போராளிகளின் எறிகணை வீச்சு மெல்ல மெல்ல முகாமின் பின்பக் கத்தை நோக்கி நகர ஆரம்பித்தது. அதே நேரத்தில் கட்டளைத் தலை மையிடமிருந்து உடனடியாகவே முகாமுக்குள் இறங்கும்படி கட்டளை வந்தது. ஏற்கனவே பல இடங்களில் வேவுப் போராளிகள் கம்பி வேலிகளை வெட்டி ஏற்படுத்தியிருந்த பாதைகளைத் திறந்துவிட போராளிகள் புற்றீசல் போல முகாமிற்குள் பாய்ந்தனர். சண்டை - கைகலப்பு எனச் சொல்லக்கூடிய வகையில் இரு பகுதியினருக்கும் இடையே நெருக்கமாக நடந்துகொண்டிருந்தது.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# ழ்ந்த முதல் வித்துக்கள்!



## ர் ஜோன்சன்
### ஸ்லாமிய தமிழர்)

ழைக்கப்பட்ட ஜுனைதீன். விடுதலைப்
ளை அர்ப்பணித்த முதல் இஸ்லாமியத்
யில் 22.08.1963 ஆம் நாள் பிறந்தார்.
நாகங்கள் (நாக படை) என்ற அமைப்பை
தில் தாக்குதல்களை நடத்தி
ர்.
க்கைகளால் நாக படை இயங்குநிலையை
புலிகளுடன் தன்னையும் நண்பர்களை
ந்தியாவில் புலிகளின் மூன்றாவது
சியைப் பெற்றார். இஸ்லாமிய தமிழன்
ுனைதீன் தலைவர் பிரபாகரனை விசு

 நிலையம், கொக்கிளாய் இராணுவ
 தனது திறமையை
டக்களப்பில் இயங்கினார்.
களில் ஆதித்திய மலைக்கு சென்றபோது
கி ஜோன்சனைக் கைது செய்து கொழும்பு
னர். அங்கிருந்து தப்பித்தபோது
தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தாய்
தமிழ் மாவீரனாக விதையானார்.



## கப்டன் மில்லர்
### (முதல் கரும்புலி)

மில்லர் என அழைக்கப்பட்ட வல்லிபுரம் வசந்தன் யாழ்ப்பாணம் கரவெட்டி - துன்னாலையை சொந்த இடமாகக் கொண்டவர். 1966.01.01 ஆம் நாள் பிறந்த வசந்தன், 1983 இல் விடுதலைப் புலிகளுக்காக இணைய முயன்றார். ஆதரவாக செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டு, கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டார். புலிகளின் நம்பிக்கையைப் பெற்றதும் வாகன ஓட்டியாக கடமையைத் தொடங்கினார்.

பயிற்சி முகாமில் மில்லர் என்ற பெயர் சூட்டப்பட்டது. பல தாக்குதல் களில் பங்கேற்ற மில்லர், இராணுவம் மேற்கொண்ட ஒப்ரேஷன் லிபரேசன் தாக்குதல் முறியடிப்பிலும் ஈடுபட்டிருந்தார். நெல்லியடி மத்திய கல்லூரியைக் கைப்பற்றிய இராணுவம் அங்கு முகாம் அமைத்து நின்றது. இராணுவப் பிடியில் இருந்து வடமராட்சியை மீட்க விடுதலைப் புலிகள் கரும்புலித் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டனர்.

திட்டம் தயாரானது. கரும்புலிகள் எனத் தனியான பிரிவு அப்போது இருக்கவில்லை. கரும்புலியாக யார் செல்வது என்ற கேள்வி எழப் பலர் முன்வந்தனர். அடம்பிடித்து வாய்ப்பை பெற்றுக்கொண்டான். முன்னரும் கரும்புலித் தாக்குதல் ஒன்றை நடத்த முயன்றிருந்தார் மில்லர். எனவே அவருக்கே வாய்ப்பு சென்றது.

சக்கை (வெடிமருந்து) நிரப்பிய சென்ற மில்லர், இலக்கை நோக்கி செலுத்தி தப்பிப்பதே திட்டம். சில வேளைகளில் இலக்குப் பிசகவும் வாய்ப்பு இருக்கும். இதனால் பிரதான முகாம் வரை சென்று மோதி அழித்தார் மில்லர். 1987.07.05 அன்று வருங்கால சந்ததிக்காக தன்னையே நெருப்பாக்கிய மில்லர்தான் முதல் கரும்புலி மாவீரர்.



## லெப்.கேணல் திலீபன்
### (முதல் அகிம்சை மாவீரர்)

லெப்.கேணல் திலீபன் என அறியப்பட்டவரின் இயற்பெயர் இராசையா பார்த்தீபன். ஊரெழுவைச் சேர்ந்தவர். யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவரான பார்த்தீபன், விடுதலைப் புலிகளில் இணைந்து திலீபன் என பெயர் சூடிக் கொண்டார்.

போர்க் களங்களில் பங்கெடுத்தவர், கூரிய அரசியல் சிந்தனை கொண்டவராக இருந்தார். களத்தில் காயமடைந்து அகற்றப்படவே விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகப் பொறுப்பு வகித்தார். விடுதலைப் புலிகள் பல துறைகளில் சிறக்க வழியமைத்தவர்களில் இவரும் ஒருவர்.

அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாற அகிம்சை ஆயுதத்தை கையில் எடுத்து உணவு, தண்ணீரை ஒறுத்து நல்லூரில் சத்தியப்போர் புரிந்தார். ஆனால் கொடுங்கோலர்களிடம் இந்தப் போராட்டம் எடுபடவில்லை. இலட்சியத்தில் உறுதியாக இருந்த திலீபன் 12 நாள் பட்டினித் தீயில் தன்னை எரித்து 1987.09.26 அன்று உயிர் நீத்தார். இவரே தாயக விடுதலைக்காக வீழ்ந்த முதல் அகிம்சை மாவீரர்.

நிலவன்



## ன் அங்கையற்கண்ணி
### தல் பெண் கரும்புலி )

யற்கண்ணி என அறியப்பட்டவர் துரை
பகளா. யாழ்ப்பாணம் - மண்கும்பானில்
 ஆம் நாள் பிறந்தவர். குடும்பம் ஏழ்மை
போதும் விடுதலை வேட்கையால் களமாடப்

கள் பிரிவில் 3 ஆவது அணியில் பயிற்சி
டற்சண்டைகளில் ஈடுபட்டார். கரும்புலி யாக
க்கோரி தலைவருக்கு கடிதமும் எழுதினார்.
லிகளுக்கான அடிப்படை பயிற்சியின்போது
ற்றர் தூரம் 8 மணி நேரம் நீந்தினார்.
ன்துறையில் தரித்து நின்ற கட்டளைக்
ரப் படகு மீதான தாக்குதலில் கரும்புலி
08.1994 ஆம் ஆண்டு கடலில் காவியமான
கண்ணியே முதல் பெண் கரும்புலியாவார்.



## மேஜர் யாழினி
### (முதல் பெண் தரைக் கரும்புலி)

மேஜர் யாழினி இவரின் இயற்பெயர் சிவசுப்பிரமணியம் ராகினி. யாழ்ப்பாணம் உரும்பிராயில் 1975.05.03 அன்று பிறந்தார்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் விடுதலைப் புலியானார். புகழ்பெற்ற மணலாறு களமுனையில் சாதித்தவர். கரும்புலி அணிக்குச் சென்றவர். சூரியக் கதிர் நடவடிக்கையில் சிறந்த வேவுப் போராளியாகவும் தன்னை நிரூபித்தார்.

பெரும் சமர்களில் முக்கியமான ஜெயசிக்குறு சண்டையில் எதிரியின் இலக்கை அழித்து 1997.06.10 ஆம் நாள் முதல் பெண் தரைக் கரும்புலியாக தாய் மண்ணுக்கு உரமானார்.





## கேணல் ரூபன் — லெப்.கேணல் சிரித்திரன்
### (முதல் வான் கரும்புலிகள்)

1990களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்தார்கள். வான்புலிகள் கட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது உள்வாங்கப்பட்டவர்கள். தலைவரின் மெய்ப்பாதுவலர்களாகவும் - நெருங்கிய தொடர்புடையவர்களாகவும் இருந்தனர். இறுதியுத்த காலததில் விமானங்களில் ஏறி பல தாக்குதல்களை நடத்தினர். இறுதிக் கட்டமாக 2009.02.20 அன்று கரும்புலிகள் ஆகினர்.



# பாரபட்சமான தீர்ப்பு




இந்திய - இலங்கை அணிகளுக்கிடையில் கொல்கத்தாவில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு மைதான நடுவர்கள் 5 ஓட்டங்கள் வழங்காதது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. ஐ.சி.சியின் புதிய விதிகளின் படி துடுப்பாட்ட வீரர்களை ஏமாற்றும் விதமாக களத்தடுப்பை மேற்கொள்ளும் அணியினர் நடந்து கொண்டால் துடுப்பெடுத்தாடும் அணிக்கு பெனால்ரியாக 5 ஓட்டங்கள் வழங்கப்பட வேண்டும்.

அந்தவகையில் அவுஸ்ரேலியாவில் சில வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஜே.எல்.ரி. கிண்ணப் போட்டி ஒன்றில் கிரிக்கெட் அவுஸ்ரேலிய பதினொருவர் அணியும் குயின்ஸ்லாண்ட் புல்ஸ் அணியும் விளையாடி இருந்தன.
இதில் குயின்ஸ்லாண்ட் புல்ஸ் அணி வீரரான மார்னஸ் லேபர்சாக் துடுப்பாட்ட வீரர்களை ஏமாற்றும் விதமாக களத்தடுப்பை மேற்கொண்டமைக்காக கிரிக்கெட் அவுஸ்ரேலிய பதினொருவர் அணிக்கு 5 ஓட்டங்கள் பெனால்ரியாக வழங்கப்பட்டது. இதன்மூலம் மார்னஸ் லேபர்சாக் இந்தவிதியால் தண்டிக்கப்பட்ட முதல் வீரர் என்ற அவப்பெயரையும் சம்பாதித்துக் கொண்டார்.

இந்நிலையில் கொல்கத்தா டெஸ்ட் போட்டியில் இந்தியா முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் பொழுது 53 ஆவது ஓவரில் ரங்கன ஹேரத்தின் பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார் ஓட்டமொன்றைப் பெற முயற்சித்தார். அப்போது அவர் அடித்த பந்தைப் பிடிக்கச் சென்ற சண்டிமல் அதைத் தவறவிட்டிருந்த போதிலும் பந்தைப் பிடித்து உடனே எறிவதாகப் பாசாங்கு செய்திருந்தார். புதிய விதிகளின் படி சண்டிமல் செய்தது தவறு என்று தெரிந்தாலும் மைதான நடுவர்களாக விளங்கிய நைகல் லோங்கும், ஜோயல் வில்சனும் சண்டிமலை அழைத்து எச்சரிக்கை செய்தார்களே தவிர இந்திய அணிக்கு 5 ஓட்டங்களை பெனால்ரியாக வழங்கவில்லை.


இது தான் சர்ச்சைக்குக் காரணமானது. இதனை ஆடை மாற்றும் அறையில் இருந்த இந்திய வீரர்கள் அவதானித்ததோடு அணித்தலைவரான விராட் கோலி தனது 5 கைவிரல்களை மைதான நடுவர்களை நோக்கி விரித்தும் காண்பித்திருந்தார்.

எனவே அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற முதற்தரப் போட்டியிலேயே இந்த விதி அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் சர்வதேச டெஸ்ட் போட்டி ஒன்றில் இந்த விதி அமுல்படுத்தப்படாமல் வெறும் எச்சரிக்கையுடன் முடிவுக்கு வந்தமை ஏற்புடையதாகத் தெரியவில்லை. மைதான நடுவர்களின் இந்தச் செயலை தொலைக்காட்சி வர்ணனையாளர்களாகக் கடமையாற்றிய சுனில் கவாஸ்கர், சைமன் டோல்டிக் போன்றவர்கள் வெளிப்படையாகவே விமர்சித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# காற்றுள்ள போதே...

அடுத்தாண்டு ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் 32 நாடுகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆனாலும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இத்தாலி, நெதர்லாந்து, சிலி, அமெரிக்கா, கானா போன்ற நாடுகள் உலகக் கிண்ணத்திற்குத் தகுதி பெறவில்லை. இது அந்தந்த நாட்டு ரசிகர்களை மிகவும் வருத்தமடையச் செய்துள்ளது. எனவே இவர்களுக்குச் சற்று ஆறுதலளிக்கும் வகையில் உலகக் கிண்ணத்திற்குத் தகுதிபெறாத சில நாடுகளை ஒருங்கிணைத்து ஒரு சர்வதேச தொடர் ஒன்றை நடத்தினால் என்ன என்றதொரு யோசனை அமெரிக்க உதைபந்தாட்டச் சம்மேளனத்திற்கு தற்போது தோன்றி உள்ளது. ஆனாலும் இந்தத் தொடரை எப்படி நடத்துவது? எத்தனை நாடுகளை உள்வாங்குவது? போன்ற பலவிடயங்கள் இன்னமும் இறுதி செய்யப்படவில்லை.

இவ்வாறானதொரு தொடர் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் ஏனைய நாடுகளின் உதைபந்தாட்டச் சம்மேளனங்கள் இதற்கு ஆதரவு அளிக்குமா? என்பதும் பெரும்பாலான நாடுகளைச் சேர்ந்த தேசிய அணி வீரர்கள் பிறீமியர் லீக், லாலிகா போன்ற தொடர்களில் கழகங்களுக்காக விளையாடி வருவதால் இவ்வாறான தொடருக்காக வீரர்களை அவை விடுவிக்குமா? என்பதும் சந்தேகமே. அத்தோடு ஏற்கனவே அமெரிக்காவில் நடைபெறும் கழகங்களுக்கிடையிலான எம்.எல்.எஸ். தொடர் மிகவும் பிரசித்தி பெற்ற நிலையில் இவ்வாறான தொடர் அவசியம் தானா என்று கேள்வியும் எழுந்துள்ளது.



ஒருவகையில் கவலைக்குள்ளான ரசிகர்களின் மனநிலையைப் பயன்படுத்திப் பணம் சம்பாதிப்பதற்கான ஒரு குறுக்கு வழியாகவும் இந்தத் தொடர் நோக்கப் படுகின்றது. அதேசமயம் "இந்தத் தொடரை நடத்துவதற்கு முன்னதாக அமெரிக்க உதைபந்தாட்ட அணிக்கு நல்லதொரு முகாமையாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள் " என்று ரசிகர்கள் சமூகவலைத்தளங்களில் தமது கருத்துக்களையும் காட்டமாகத் தெரிவித்து வருகின்றனர்.




# மீண்டும் விலகினர்

இங்கிலாந்து ரென்னிஸ் வீரர் அண்டி முரேயும் அவரது பயிற்சியாளரான இவான் லெண்டியும் மனமொத்து விலகிச் செல்வதற்கு முடிவு செய்துள்ளனர். இவான் லெண்டி 2011 - 2014 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை அண்டி முரேயின் பயிற்சியாளராக விளங்கியவர். பின்னர் கடந்த வருடம் ஜூன் மாதம் மறுபடியும் அண்டி முரேயின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றிருந்தார். இவரது பயிற்சியின் கீழ் அண்டி முரே கடந்த வருடம் நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் சம்பியன் பட்டத்தை வென்றதோடு பிறேசிலில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கத்தையும் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது 57 வயதான செக்குடியரசைச் சேர்ந்த இவான் லெண்டி 1978 - 1994ஆம் ஆண்டு வரை சர்வதேச ரென்னிஸ் போட்டிகளில் விளையாடி 8 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் வென்றுள்ளார்.

ஆனாலும் விம்பிள்டனில் இரண்டு தடவைகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறினாலும் ஒரு தடவை கூட இவரால் கிண்ணம் வெல்ல முடியவில்லை. அந்தக்குறையை அண்டி முரேக்கு பயிற்சியாளராக விளங்கிய 2013 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் அவரைச் சம்பியனாக்கியதன் மூலம் ஓரளவு ஆறுதல் அடைந்தார்.

இது குறித்து அண்டி முரே ' கடந்த காலங்களில் நாம் பெரு வெற்றியைப் பெற்றுள்ளதோடு அவரிடமிருந்து நிறைய விடயங்களை நான் கற்றும் கொண்டேன். அவர் வழங்கிய வழிகாட்டலுக்கும் உதவிகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் ' எனக் கூறியுள்ளார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 25.11.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.